மூன்று நாட்களில் கல்வியைப் பெறுவதற்காகத் தேவியைச் சரசுவதியாகப் பாவித்து பூசிப்பதும் மரபு. ஆதலால் இதற்குத் துர்க்கா லக்ஷ்மீ சரசுவதி பூசை என்றும், மகாநவமி தேவிபூசை என்றும், சரசுவதிபூசை என்றும் பெயருண்டு. இந்த வகையான நவராத்திரி விழாவிற்குச் சாரதா நவராத்திரி என்று வழங்கி வருதல் பிரசித்தம். கடைசி நாளாகிய பத்தாவது நாளில் ஆண்டவன் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வந்து வன்னி மரத்தில் அம்பு தொடுத்தலான ஐதீகம், ஆன்மாக்களது மலங் களைப் போக்கிப் பக்குவப் படுத்துகிறான் என்பதை விளக்கு மென்பர் ஆன்றோர்.

இந்த விரதநாட்களில் மக்கள் நாள் தோறும் விடியற்காலையில் எழுந்து நீராடி, நித்திய கடன்களை முடித்துக்கொண்டு விரதமிருந்து தேவியை விதிப்படிப் பூசித்து அம்பாளுக்குரிய அருள் நூல்களை ஓதி அவளருளைப் பெற்று இன்புறலாம். மேலும் இந்நாட்களில் கன்னிப் பெண்களைத் தேவியின் அம்சமாகப் பாவித்து அவர்களைப் பூசித்து அவர்களுக்கு உண்டி, உடை, ஆபரணம் முதலியன கொடுத்து உதவவேண்டும்.

இவ்விரதத்தை விதிப்படி அநுட்டித்துத்தான் ஸ்ரீராமபிரான் சீதையிருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டான் என்று தேவி பாகவதம் கூறும்.

மற்றொருவகையான நவராத்திரி விழா

சித்திரைமாதத்தில் அமாவாசை கழித்து வரும் ஒன்பது நாட்களிலும் மக்களில் ஒருசாரார் தேவியை விதிப்படி எழுந்தருளச்செய்து பூசித்துப் பேறு பெறுவதும் வழக்கம். இதற்கு வசந்த நவராத்திரி என்று பெயர். இவ்விழாவினை வெகு சிலரே அநுட்டிப்பதால் இது பிரசித்தமாக விளங்காமலிருக்கிறது.

அன்னாபிஷேக விழா

இது ஐப்பசி மாதத்தில் வரும் பௌர்ணமி திதியன்று சிவலிங்கப் பெருமானை விசேஷமாக அன்னத்தால் அபிஷேகஞ் செய்து, நிவேதனங்களுடன் வழிபட்டுவருகிறதைக் குறிக்கும்.

தெப்போற்சவம்

இது பெரிய திருக்குளங்கள் உள்ள சிவாலயங்களில் நடைபெறும். காஞ்சிபுரம், மதுரை முதலிய பெரிய தேவாலயங்களில் பிரசித்தமாக நடைபெறுகிறது. இவ்விழாவின் தத்துவம் ஆண்டவன் நீரில் வாழும் ஜீவராசிகளுக்கும் அருள் புரிவதற்காக இவ்விழாவை மேற்கொண்டுள்ளான் என்பர். பெரிய தெப்பங்கட்டி அதில் ஆண்டவனைச் சர்வஅலங்காரங்களுடன் எழுந்தருளச்செய்து அக்குளத்தில் மூன்று அல்லது ஐந்துமுறை வலம்வரச் செய்வார்கள். அப்போது மக்கள் இவ்விழாவினைக் கண்டு ஆண்டவனை வணங்கி மகிழ்வர்.

இனி, திருவள்ளுவர் திருக்குறளொன்றும் இதனைக் குறிப்பது என்பது ஆன்றோர் கொள்கை.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

பொருள்: இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங் கடல் நீந்துவர் = இறைவனடி என்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்; சேராதார் நீந்தார் = அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்துவர்).

வசந்தோற்சவம்

இது எல்லாச் சிவாலயங் களிலும் சித்திரை, வைகாசி மாதங்களாகிய கோடைகாலத்தில் 3நாள், 5நாள், 10நாள் வரை நடத்தப் பெறும். இதன் தத்துவம், மக்கள் தங்கள் வீடுகளில் வெயில் வெப்பம் தாங்காமல் வருந்தும் நேரத்தில் வெளியில் குளிர்ச்சியைத் தரும் நந்தவனம், தடாகக் கரை, ஆற்றோரம் முதலிய இடங்களுக்குச் சென்று வெயில் தணியும் வரை அங்கு தங்கியிருந்து பின் வீடு திரும்புவதைக் குறிக்கும். இதனுடன் மக்கள் தாங்கள் சேரும் இடங்களுக்கு ஆண்டவனையும் அலங் கரித்து எழுந்தருளச் செய்து அங்கு பெருமானை அபிஷேகாதிகளால் மகிழ்வித்து குளிர்ந்த ததியோதனம் (தயிர்சாதம்) நிவேதனம் செய்து தாமும் உண்பது வழக்கம். இவ்விழா மக்கள் நன்மைக்காகவே அமைக்கப் பெற்றதாகும் எனலாம்.

விடாய் ஆற்றி உற்சவம்

இது விடையாற்றி உற்சவம் என வழங்கப்பெற்று வருகிறது. உற்சவ காலங்களில் மக்களுக்கு ஏற்பட்ட விடாயை (சிரமத்தை) ஆற்றிக் கொள்ளும் பொருட்டுச் செய்யப் பெறுவது இவ்வுற்சவம்.

விருஷப வாஹனத்தில் சிவனார் பார்வதி

மெத்தை உற்சவம்

சில கோயில்களில் பெருமானை அலங்கரித்து ஆலயத்தின் மெத்தையின் மீது எழுந்தருளச் செய்து வழிபாடுகள் நிகழ்த்தி வருவது மரபு. இதுவும் மக்கள் நலனுக்காகவே ஏற்பாடு செய்யப் பெற்றது.

(கமனோத்ஸவம்) புறப்பாட்டு விழா

மெத்தை விழா மலை ஏற்றுவிழா

குறிப்பிட்ட இடத்திற்கு சுவாமியை அழைத்துச் சென்று அங்கு உபசரித்தலும் அற்புதக்காட்சிகளால் மகிழ்வித்தலும் முறையாகும். மலைப்பகுதி, மண்டபத்தின் மேல்தளம், வனப்பகுதி, பூஞ்சோலை, கொடிமண்டபம், நதிக்கரை, மணிமண்டபம், இவற்றில் ஒன்றைக் குறித்து தெய்வம் சென்று வருதலால் இது கமன உத்ஸவம் எனப்படுகிறது.

பிரதோஷ உற்சவம்

இது வளர்பிறைத் திரயோதசியன்றும், தேய் பிறைத் திரயோதசி யன்றும் கொண்டாடப் பெறும் உற்சவத்தைக் குறிப்பது. இதன் வரலாறு :

முன்னொரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் ஒன்றுகூடி மேருமலையை மத்தாகத் திருப்பாற்கடலில் நிறுவி, அதனைச் சுழற்றக் கயிறாக வாசுகி என்ற பெரிய பாம்பைச் சுற்றிக் கடலைக் கடைந்தார்கள். எதற்காக? அதனின்றும் அமுதத்தைப் பெற்றுத் தாங்கள் உண்டு சாகாமலிருப்பதற்காகத்தான். ஆனால் கடலைக் கடைந்த வேகத்தால் வாசுகி வலி தாளாமல் விஷத்தைக் கக்கியது. தேவர்களும், அசுரர்களும் பயந்து கயிலை மலைக்கு ஓடிச் சிவபெருமானிடம் சரணம் என்றார்கள். இவர்களைத் துரத்திச் சென்ற விஷத்தைச் சிவபெரு மான் உண்டு, அத்தேவர்களைக் காப்பாற்றினார். இது மட்டுமா? தேவர்களை நோக்கி

நீங்கள் இன்னு மொருமுறை அக்கடலைக் கடையுங்கள். உங்களுக்கு அமுதம் கிடைக்கும்' என்றார். தேவர்களும் அவ்வாறே செய்தனர். பல விலையுயர்ந்த பொருள்கள் கிடைத்தன. அவற்றைத் தேவர்கள் விருப்பத்தோடு ஏற்றுக் கொண்டு மகிழ்ந்தார்கள். இது நிகழ்ந்த காலம் ஒரு ஏகாதசி இரவு. மேலும் அக்கடலைக் கடைந்தபோது மறுநாள் விடியற்காலையில் (துவாதசி) சுமார் 6 மணிக்கு அமுதம் தோன்றியது. அதனை எடுத்து அனைவரும் உண்டு மகிழ்ந்தனர். ஆடல் பாடல்களில் அந்நாளைப் போக்கினர். மறு நாள் திரயோதசியன்று சிவபெருமானை நினைத்து அவர் இருப்பிடமாகிய கயிலை சென்று பெருமானை நோக்கித் தம்மை மன்னித்தருளுமாறு வேண்டினர். அன்புக்கிரங்கும் கருணைக்கடலான ஆண்டவனும் அவ்வாறே அவர்களை மன்னித்தருளி மாலை 4–30 மணிமுதல் 6–00 மணி வரையுள்ள நேரத்தில் (பிரதோஷ நேரம்) ரிஷபத்தின் இரு கொம்பின் மத்தியில் இருந்துகொண்டு நடனஞ் செய்தார். தேவர்கள் தரிசித்துப் பேறுபெற்றனர்.

இவ்வுற்சவத்தைத் தவறாமல் தரிசித்தோர் மற்றநாட்களில் ஆலய தரிசனம் செய்யாதுபோன பாவமும் நீங்கப்பெறுவர். இது உறுதி.

அவ்வுற்சவ காலத்தில் நந்திதேவர் பக்கத்திலும், ஈசுவரன் சந்நி தியிலும் நெய்த்தீபம் வைக்கவேண்டும். நந்திக்குச் சிகப்புஅரிசி நிவேதனம் செய்விக்க வேண்டும். அறுகம்புல் மாலை சாத்த வேண்டும். சந்திரசேகாருக்கு விசேஷ அபிஷேகம் செய்து ரிஷபவாகனத்தில் அமர்த்தித் திருக்கோயிலுக்குள் பிரகாரத்தை மூன்று முறை வலஞ் செய்விக்க வேண்டும். ஒருமுறை சுவாமிக்கு முன்னே நாதசுர வாத்யமும், இரண்டாம்முறை வலம் வரும்போது வேதபாராயணமும், மூன்றாம் முறை வலம் வரும்போது பன்னிரு திருமுறை பாராயணமும் செய்விக்க ஏற்பாடு செய்தல் வேண்டும் இவ்வுற்சவ காலத்தில் சுவாமி அபிஷேக ஜலம் விழும் நிர்மாலியத் தொட்டியை கடக்காமல் வலமாகவும் இடமாகவும் மாறி மாறிச் சிவாலயத்தை வலம் வருவது மரபு. அன்று பட்டினியிருப்பதும் நன்று.

பவித்ரோற்சவம் (பெருஞ்சாந்தி உற்சவம்)

சிலர் இதனை கும்பாபிஷேகம் என்பர். ஆனால் திருஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய பூம்பாவைத் திருப்பதிகத்தில் திரும யிலையில் மாதந்தோறும் நடைபெறும் உற்சவங்களை வரிசையாகக் குறித்துள்ளபடியால் இங்கு குறிக்கப்பட்ட பெருஞ்சாந்தி என்பது கும்பாபிஷேகத்தைக் குறிக்காமல், ஆவணி மாதத்தில் நடைபெறும் பவித்ரோற்சவத்தையே குறிக்கும் என்னலாம்.

இவ்விழா பெரும்பாலும் ஆவணி அவிட்டத்தின் போது நடத்தப்பெறும். இது இருவகை ஒன்று நித்திய பவித்ரோற்சவம் மற்றொன்று வருஷப்

பவித்ரோற்சவம் முன்னையது நித்தியத்தில் ஏற்படும் தாழ்வுகளைப் போக்கிக்கொள்ளச் செய்யப்பெறுவதாகும். தினந்தோறும் பூசை முடிவில் அறுகம்புல்லை அட்சதையுடனும் எள்ளுடனும் சேர்த்து மந்திரம் சொல்லிப் பெருமானுக்கும் சாத்துவது மரபு. மற்றொன்று ஆண்டுதோறும் செய்யப்பெறும் வருஷப்பிராயச்சித்த உற்சவமாகும். இதன் விளக்கம் சித்தாந்த சாராவளியில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது காண்க.

பவித்ராரோபண காலம்

(சரியாபாத வியாக்யானம்–5ம் ஸ்லோகம்)

"அர்க்கே யுக்மகதே ஹரிர் நிஜதி தௌசேதே'

எனத் தொடங்கும் ஸ்லோகத்தின் தாற்பரியம்.

திருமால் சயனித்தபின்பு பவித்ரபூசை யென்றதனால் அதற்குமுன் கூடாது என்பதாயிற்று.''

ஆஷடாமாச சுக்லபக்ஷ துவாதசி விஷ்ணுவின் சயனகாலமென்று பிரசித்தமாயிருக்க, இங்கு எப்படி மிதுன சுக்ல துவாதசி சயனகாலமென்ற தென்னில் மிதுனமென்பது ஸௌரமானத்தால் ஆனி மாசமாகும். அதில் சாந்திரமானத்தால் ஜேஷ்டமாசமும் ஆஷாட மாசமும் கலக்கும். ஜேஷ்டம் கலந்தது அதோ மிதுனமென்றும், ஆஷாடம் கலந்தது ஊர்த்துவமிதுன மென்றும் சொல்லப்பெறும். இவ்விடத்தில் ஊர்த்துவ மிதுனத்தைச் சொல்லியபடியால், அதுவே ஆஷாட மாகும். இந்தப்படி ஸௌரமானத்தால் மிதுன கடக சிம்ம மாசங்கள் (ஆடி, ஆவணி, புரட்டாசி) உடன் கலந்த ஆஷாட சிராவண, பாத்திரபத மாசங்கள் (ஆடி, ஆவணி, புரட்டாசி) மூன்றும் பவித்ரோற்ச வத்திற்கு முறையே உத்தமம், மத்திமம், அதமம் ஆகும் என்று தெரிவிக்கும் பொருட்டு மூன்று மாசங் களில் என்றது. கன்னியா மாசம் கூடாது. செய்தால் ப்ராயச்சித்தம் செய்து செய்யவேண்டும்.



காமதேனு வாஹனத்தில் மீனாட்சியம்மன்

திருமால் சயனதிற்குப் பிறகே பவித்ரோற்சவம் விதித்தபடியால் அந்த திருமால் சயனகாலம் அதிகமாச மில்லாத வருஷத்தில் மிதுன மாசத்தோடு கலந்த ஆஷாட சுக்ல துவாதசியாகும். அதிகமாசம் வரும் வருஷத்தில் மிதுனாஷாடத்தை விட்டுக் கடகாஷாட சுக்லத் துவாதசி அல்லது கடக ச்ராவண சுக்லத் துவாதசியாகும் என்றறிக. அப்போது பூர்வத்தில் மலமாசமானபடியால் உத்தர மாசத்ல் பவித்ரோற்சவம் செய்ய வேண்டுமென்றவாறு. கடகமாசத்தில் நித்திரை செய்கின்றார் என்றதனால் சைத்ராதி ஆறு மாசங்களுக்குள்ளே, எந்த மாசத்தில் அதிகமாசம் வந்தபோதிலும் திருமால் சயனம் கடகமாசத்திலேயே என்று நிச்சயிக்கப்படும். மற்றும் இவ்விஷயத்தி லுண் டாகிய விசேஷங்களை மூலக்ரந்தங்களில் கண்டு கொள்க.''

பவித்ரமாலை இலக்கணம்

அடுத்து வரும் சுலோகங்களின் பொருள்களும் பின்வருமாறு :

சிவலிங்க பூஜார்த்தமாக பருத்தியிலுண்டான ஒன்பது இழையுள்ள நூல் 108ஆல் செய்யப்பட்ட ஆன்மபவித்ரம், வித்யாபவித்ரம், சிவபவித்ரம் என்னும் மூன்று பவித்ரமும் லிங்கத்தின் சிரசில் சரியான அளவுள்ள தாக விருக்கவேண்டும். இந்த தத்துவத்ரய பவித்ரங்களுக்கு ஆகம வசன ப்ரமாணப்படி 10, 9 முதலான கிரந்திகள் (முடிகள்) போடவேண்டும். மேல் நான்காவதான கங்காவதாரம் என்னும் பவித்ரமும் முன் போலவே நூற்றெட்டு நூலினாலே செய்யத்தக்கது. அதற்கு நூல் கணக்குக் கனுகுணமாக முடி போடவேண்டியதாகும்.''

நூல்கணக்கு எப்படியென்னில், நவஹஸ்தம் முதல் ஏகஹஸ்தம் வரையில் உத்தமோத்தமாதி பேதங்களாலே லிங்கம் ஒன்பது விதமாயிருக்கும். அவற்றுள் உத்தமோத்தமமாகிய நவஹஸ்த லிங்கத் தில் விதித்த சூத்திரக்கணக்கு நூற்றெட்டை அங்கிருந்து பத்துப் பத்தாகக் குறைத்துக்கொண்டு வருகையில் ஏகஹஸ்தப்ரமாண லிங்கத்தில் சூத்திரக் கணக்கு இருபத்தெட்டாகும். அப்படியே கிரந்திக் கணக்கும் நவஹஸ்த லிங்கத்தில் ஐம்பதாக விதித்த கிரந்திக் கணக்கை, அங்கிருந்து நான்கு நான்காகக் குறைத்துக்கொண்டு வருகையில் ஏகஹஸ்த லிங்கத் தில் கிரந்திகள் பதினெட்டாகும். இந்த சூத்திரக் கணக்கும், கிரந்திக் கணக்கும், கங்காவதார பவித்திரத் திற்காகும் என்றறிக.

பாணலிங்கம். சுயம்புலிங்கம் முதலானவற்றிற்கு முன்னுத்தமாதி க்ரமமாகச் சொல்லப்பட்ட 108, 54, 27 கத்திரங்களில் ஒருவிதத்தால் அல்லது 81 முதலாக விதித்த சூத்திரங்களில் ஒருவிதத்தாலாவது பவித்ராரோபணம் செய்யலாமென்னும் கருத்தை மேற் கொண்டு கூறுகின்றார். எப்படியென்னில் 108, 54, 27 சூத்திர பவித்ரங்களில்

ஒருவித பவித்ரத்தினாலே பூசிக்கப்பட்ட பாண, சுயம்புலிங்க விஷயத்தில் 81 சூத்திரபவித்ரமாவது அல்லது 36சூத்திர பவித்ரமாவது அல்லது 50சூத்திர பவித்ரமாவது சமர்ப்பித்துப் பூசிக்கலாம். மேல், ஆன்ம வித்யா, சிவமென்னும் தத்வத்திரய பவித்ரத்தில் தசவித கிரந்திகளுக்கும் அதிதேவதைகள் ப்ரகிருதி முதலான சத்திகள் பத்துமாகும் : கிரந்திகள் ஒன்பது என்னும் பக்ஷத்தில் வாமாதி நவசக்திகளும் அதிதேவதைகள் ஆகுமென்றறிக. கங்காவதார பவித்ரத்தின் கிரந்திகள் 18ல் மேலும் கீழுமிருக்கும் கிரந்திகள் இரண்டிற்கும் அதிதேவதை சிவனோடுகூடிய சத்தியாகும். அதில் மேலுக்குச் சிவனும் கீழுக்குச் சத்தியு மதிதேவதை யாகும், என்றறிக. மற்றப் பதினாறு கிரந்திகளுக்கும் சந்திரகலைகள் 16ம், பிராஸாதமந்திர கலைகள் 16ம் அதிதேவதைகளாகும். ஒன்பதிழையாக மடித்திருக்கின்ற சூத்திரங்களின் நவதாதுக்களுக்கும், ப்ரணவம் முதலான, அதாவது ப்ரணவம், சந்திரன், அக்னி, பிரம்மா, நாகம், குஹர், ரவி, சாதாக்கிய, சர்வதேவர்கள் என்னும் இவ்வொன்பது பெயர்களும் அல்லது பிரம்மா, விஷ்ணு , ருத்திரர், ஈசுவரர், சதாசிவர், சோமன், சூர்யன், அக்னி, சர்வதேவர்கள் என்னும் இவ்வொன்பது பெயர்களுமாவது அதிதேவதைகளாவார்கள். பின்னும் கங்காவதார பவித்ரமாவது, பிரம்மாதி விஷயங்களில் முழந்தாள்வரையில் நீண்டிருக்கவேண்டும்.

பருத்திநூலென்றது, பருத்திமுதலான நூல் என்றறிக. கிருதயுகம் முதலான மூன்று யுகங்களிலும் முறையே பொன், வெள்ளி, செம்பு இவற்றினால் செய்த பவித்ரமாகும். கலியுகத்தில் சக்தியானுசாரமாகப் பருத்திநூல் பவித்ரமும் செய்யலாம். அது த்விஜ கன்னிகை (பிராமண, க்ஷத்ரிய, வைசிய) நூற்றதாயும், மும்மூன்று ஒன்பதாக மடித்ததாயும், சுத்த வெளுப்பாயும், அழகாயும் இருக்கவேண்டும். பட்டுநூல், மரவுரி, தாமரைநூல், வெண்பட்டுநூல், தர்ப்பம், சணல்நார், முஞ்சம்புல் முதலானவற்றாலும் பவித்ரம் செய்யலாம். அவற்றுள் பட்டு, வெண்பட்டு,

சாதகவிஷயம்; தர்ப்பம் யதிவிஷயம்; முஞ்சம்புல் முதலானது தரித்திர விஷயமென்றும், த்விஜ என்றது விசேஷ ஸம்ஸ்காரமுள்ளவன். அவனில்லாவிடில், த்ரைவர்ணிகன் என்றும், கன்னிகையென்றது விதவைநீங்கலாக வென்றும் கொள்க.'' (இவற்றைச் சாத்தும் முறை, மந்திரங்களை உச்சரித்துச் செய்ய வேண்டிய முறைகளைச் சிவாசாரியர்கள் பால் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.)

பவித்ரதானம் நித்யாங்கம்

ஒரு ஸம்வத்சரத்தில் நாடோறும் செய்யும் பூசையில் மந்த்ர , திரவிய, கிரியாதிகளினாலேயும், ப்ரமோஹாதிகளினாலேயும் (மயக்கம்) காரிய கௌரவத் தாலும், ராஜசோர பயாதிகளினாலேயும், நேரிட்ட குறையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு நித்யாங்கமாக இந்த பவித்ரம் சமர்ப்பணம் செய்ய வேண்டும். பின்னுமிந்தப் பவித்ரம் நாடோறும் செய்வது தைவஸிகம் (நித்யம்) என்றும், வருஷந்தோறும் செய்வது வார்ஷிக மென்றும் இருவகையாம். இருவிதத்தில் ஒன்று மாத்திரம் செய்தால் அமையாதோ எனில் நாள்தோறும் செய்யும் புஷ்பதற்பாதிகள் செய்யவேண்டும் பவித்ரமும் அவ்வந்தனாதி நித்யகர்ம லோபத்திற்கும், தைவசிகம் எனில், இது விசேஷகர்மமாகையால் நாள்தோறும் செய்ய முடியாது. சூத்திரத்திற்குப் பதிலாக தர்பாதிகளினாலே நாள்தோறும் பவித்ரம் தரவேண்டும். அந்தக்குறை பூர்த்தியாக வருஷம் அவசியம் செய்ய வேண்டும். ஸந்தியாவந்தனாதி நித்யகர்ம லோபத்திற்கும் போல, பவித்ரத்திற்கும் பிராயச்சித்தம் விதித்திருக்கிறது. தைவசிக மில்லாவிடில் வார்ஷிகமும் பிரதானமாகமட்டாது. நித்யோற்சவத்திற்காகவே ஸம்வத்ஸரோற்சவம் போல, நித்ய பவித்ரத்திற்காகவே, ஸம்வத்ஸர பவித்ரமாதலால் இது நித்யாங்க மென்பதே சித்தம்.

பவித்ரோத்ஸவதிரவியங்கள்

இப்பவித்ரோற்சவ காலத்தில் சுவாமிக்கு முன்னர் ஒரு தட்டில் சில பொருள்களை வைத்து அவற்றை மந்திர பூர்வமாக ஆண்டவனிடம் சமர்ப்பித்து உபசாரம் செய்வது எதற்காக என்றால் கூறுதும் சிவனை அர்ச்சிக்கும் சிவாசாரியர்கள் நான்குமாத காலம் வரையில் வெளியில் செல்லாதிருக்க வேண்டு மென்பது மரபு. (இது சாதுர்மாஸ்ய விரதம் போல என்க) சிவாசாரியர்கள் தாங்கள் நான்கு மாதகாலம் வரை ஊரைவிட்டு வெளியே செல்லவில்லை என்று ஆண்டவனிடம் சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். அக்காலத்தில் தங்களுக்குத் தினசரி உபயோகத்திற்காக வேண்டியபொருள்களை ஆண்டவன் திருமுன் வைத்து மந்திர பூர்வமாக விண்ணப்பித்துக்கொண்டு அவற்றைத் தாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அவையாவன:

(1) கத்தரிக்கோல், பல்குச்சி, நாக்கு வழிக்கும் கருவி, ஊசி, காதுகுரும்பி, நகம் வெட்டும் கருவி, ஆகிய பொருள்களை இறைவனுக்குக் கிழக்கே வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

(2) கௌபீனம், துண்டு, தைலம், நெல்லிமுள்ளி, மஞ்சள், பஞ் சகௌவியம், பஞ்சாமிர்தம், ஆகியவற்றை இறைவனுக்குத் தெற்கில் வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

(3) ஈக்ஷாஹாரம், ஈர்க்குளி, சீப்பு, மயிர் சிக்கெடுக்கும் கருவி, வஸ்திரம், உபவீதம், புஷ்பம், ஆபரணம், சந்தனம் ஆகியவற்றை இறைவனுக்கு மேற்கில் வைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

(4) ஒட்டியாணம், யோகபட்டம், பிக்ஷாபாத்திரம் கமண்டலம், வேணு தண்டம், சாமரம், குடை, கண்ணாடி, விபூதி, பாதுகை, மாத்திரைக்கோல், கத்தி, மான்தோல் ஆகியவற்றை இறைவனுக்கு வடக்கே வைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

[இவை சூக்ஷ்மாகமத்திலும், அம்சுமத்பேதத்திலும் கூறப்பட்டுள்ளன.)

(இவையன்றி, புற்றுமண்) மிருத்திகை, ஜலம், கோரோசனம், கஸ்தூரி, பச்சைகர்ப்பூரம், குங்குமப்பூ, மா, தர்ப்பை, எள், நெய், உருத்ராக்ஷம், அரைஞாண்கயிறு, மைசிமிழ், தாம்பூலம், அன்னம், நெய், புலித்தோல் கட்டில் முதலிய பொருள்களும் பவித்ரோற்சவவிதி என்றநூலில் கூறப்பட்டுள்ளன.)

குறிப்பு: சிவபூசை செய்யும் இல்லறத்தாரும், துறவிகளும் பவித்ரோற்சவத்தையனுஷ்டிக்க வேண்டியிருப்பதால் மேலே கூறப்பட்ட பொருள் களுள் அவரவர்க்குரிய பொருள்களை அவரவர் கொள்ள வேண்டும்.

மேலும் இப்பவித்ரோற்சவத்தை நடத்திவைக் கும் சிவாசாரியார்களை அடுத்து யாககுண்டங்கள் அமைத்தல், கலசஸ் தாபனம், பரிவாரங்களை அமைத் கல், பூசிக்கும் முறை, மந்திரங்களின் விவரம் முதலிய வற்றைத் தெரிந்து கொள்வார்களாக ! திருமால் சயனித்தபின் இப்பவித்திரோற்சவம் செய்ய வேண்டு மென்று விதித்தது எதற்காக என்னில் சிறிது விளக்குவாம்.

ஒவ்வொரு சிவாலயத்திலும் சிவபெருமானைப் பூசிப்போர் திருமால் முதலாக சிவாசாரியர்கள் ஈறாக உள்ள தாலும், அவற்றுள் தேவர்கள் குறைவு ஏற்படலாம். மக்கள் செய்யும் பூசையிலும் குறைவு ஏற்படலாம்.

இவ்விரு குறைகளையும் போக்குவதற்காகவே வருஷ பவித்ரோற்சவத்தை விதித்துள்ளார்கள். தேவர்களுக்குள் தலையாய தேவரும், சிவபெருமானது முதலடியாராகவும் உள்ளவர் திருமால் ஆதலால், அவர் பூசையில் ஏற்பட்ட குறையையும் நாம் போக்க இப்பவித்ரோற்சவத்தைச் செய்வது அவர் பூசையிலும் குறை காண்பதாக இருக்கும் என்று அவர் திருமுன் செய்வது சரியல்ல என்றெண்ணியே இவ்வுற்சவத்தைத் திருமால் சயனித்த பின் செய்க என்று ஆகமம் விதித்தது என்பர் ஆன்றோர்.

ஊஞ்சல் உற்சவம் (டோலோத்ஸவம்)

ஊஞ்சல்விழாவானது மாலையில், புஷ்பமண்டபத்துள், முறைப்படி ஊஞ்சலை அமைத்து, அதைப்பூசித்து, அந்த ஊஞ்சல் பலகையின் மீது சிவசக்திகளையும், நடுவில் கந்தரையும் அமரச்செய்து. பலவகையான சங்கீதநிருத்தம், வாத்யங்களால் தெய்வங்களை மகிழ்விப்பதாகும். இவ்விழாவை பிரதிமாத ஆதிரையிலோ, நித்தமுமோ செய்யவேண்டும் என்று காமிகாகமத்தின் டோலரோஹணஉத்ஸவபடலம் கூறுகிறது. இவ்விழாவை பூந்தோட்டநடுவே செய்திடக்கூறும் சூக்ஷ்மாகமசான்று,

புண்யகால உத்ஸவம் (சிறப்பு புனிதகாலவிழா)

ஆருத்ராந்தம் ஸர்வமாஸேஷு விஷு கிரஹண மந்தகம்.

அன்ய புண்ய தினே சைவ உத்ஸவம் காரயேத் புத: (சூக்ஷ்மாகமம்)

மாதப்பிறப்புகாலமான ஸங்க்ராந்தி, விஷு, விஷ்ணு பதி, ஷடசீதிமுகம் அயனாரம்பகாலம், அர்தோதயகாலம், மஹோதயகாலம், பௌர்ணமி, அஷ்டமி, 12 மாதத்தின் திருவாதிரைத் திருநக்ஷத்திரகாலம், பிரதோஷம் சிவராத்ரி முதலியன புண்யகாலங்களாகும். இவற்றில் அன்று மட்டும் அக்காலநேரத்தில் செய்யப்படும் விழா புண்யகால சிறப்பு விழாவாகும்.

வாரோத்ஸவம் (கிழமைவிழா)

திங்கள்கிழமை, வெள்ளிக்கிழமை, முதலியவற்றில் மாலையில் ஆலயத்தின் சுற்றுப்பிரகாரங்களில் மும்முறை முறையே உலா வருதல் வார உத்ஸவம் ஆகும். வாரகிரஹத்தின் நிறத்தில் சாத்துபடிசெய்வர்.

பிரதிஷ்டோத்ஸவம் (நிலைநிறுத்தியநாள்விழா)

கோயில் கும்பாபிஷேகம் செய்த தினத்தில் இரவில் வீதி உலா செய்யப்படுவது. இதனை 3 நாள் 5 நாள் 7 நாட்களிலோ அன்று மட்டும் ஒரு நாளிலோ செய்யலாம். மண்டலாபிஷேக நிறைவு நாளில் உரிய சிறப்புவாகனத்தில் செய்யப்படுவதும் இவ்விழாவாகும்.

கல்யாணோத்ஸவம் (தெய்வத்திருமணவிழா)

பலநாள் நடைபெறும் பெருவிழாவில் 4–ம் நாளிலோ 5–ம் நாளிலோ, 7–ம் நாள் அல்லது ஒன்பது அல்லது பத்தாம் நாளில் விவாஹ உத்ஸவம் ஒருமுறை செய்யத்தக்கதாகும். ஊர்மக்களை மகிழ்விப்பதும் இதன் நோக்கமாம்.

அடியார் திருவிழா (பக்தோத்ஸவம்)

ஆலயதெய்வப்பெருவிழாவின் நடுவே பக்தர்களுக்கும் விழா நடத்தப் படவேண்டும். தனியே செய்தலாகாது. தேவோத்ஸவேந கர்த்தவ்யம் பக்தாநாம் உத்ஸவம் ச்ருணு என்கிறது ஆகமம்.

ஆலயவிழாச் சிறப்பு

ஆலயம் சென்று அங்குள்ள சந்திரசேகரர், சோமாஸ்கந்தேச்வரர் முதலான மகேசமூர்த்திகளை துதித்து வழிபடுதல் சரியையில் கிரியையாம் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பர். இம்முறையை அப்பர் விளக்குவார்.

நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலு மெம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர் வதன்முன்னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலை யாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சய போற்றி போற்றி யென்றும்
அலை புனல் சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே. (திருநாவுக்கரசு நாயனார்)

ஆலயங்களில் விதிப்படி உற்சவம் செய்பவர்களுக்கும், செய்விப் பவர்களுக்கும் பாவம் நீங்கும், ஞானமுண்டாகும், அங்கு அசுரர்கள்களின் தொல்லைநீங்தி அமையும் வளமும் பெருகும். இதனை சேக்கிழார் பெருமான் பிறவிப்பயன் என்று பெரியபுராணத்தில் கூறுவார். அது.

மண்ணி னிற் பிறந்தார் பெறும் பயன்ம திசூடும்
அண்ண லார டியார் தமை யமுது செய்வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார்
(திருஞானசம்பந்தர் புராணம்)

அன்ன வாஹனத்தில் பார்வதிதேவீ

பத்துநாள் உற்சவ தத்துவவிளக்கம்

ஆலயத்தின் மகோற்சவநாள் பத்தினுள் முதல் நாள் விழா பத்தான்மாக்கள் ஸ்தூலதேகத்தை நீக்கிக்கொள்ளுவதற்காகச் செய்யப் படுவதாகும். பரமவைத்தியராகிய சிவபெருமான் ஸ்தூலசூக்குமமாகிய இருவகைப் பிரபஞ்சங்களையும் மருந்தாக நமக்குத் தந்தது, மலமாகிய நோயை நீக்கி அஞ்ஞானத்தைக் கெடுத்துச் சிவஞானத்தை விளக்கிச் சிவானந்தப் பெரும்பேறு தந்தருளுதற் பொருட்டேயாம். இரண்டாம்நாள் விழா தூலசூக்குமம் நீங்குதற்பொருட்டும், மூன்றாம்நாள்விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மணமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீங்குதற்பொருட்டும், நாலாம்நாள்விழா நாற்கரணமும் நால்வகைத் தோற்றமும், நீக்குதற்பொருட்டும், ஐந்தாம்நாள் விழா ஐம்பொறி செயலும், ஐந்து அவஸ்த்தைகளும், ஐந்துவகை மலங்களும் நீக்குதற்பொருட்டும், ஆறாம்நாள்விழா காமம் குரோதம் முதலானஆறும், கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும், நீக்குதற்பொருட்டும், ஏழாம்நாள்விழா ஏழுவகைப்பிறப்பும், கலாதியேழும், மாயாமல குணங்களேழும் நீக்குதற்பொருட்டும், எட்டாம்நாள் விழா இறையில் எண்குணம் விளக்குதற்பொருட்டும், ஒன்பதாம்நாள்விழா மூன்றுருவும் முத்தொழிலும் மூன்றிடத்துறைதலும் இல்லையென்ற பொருட்டும், பத்தாம்நாள்விழா பரமானந்தகடலில் ஆன்மா அழுந்துதற்பொருட்டும் செய்யப்படுவதாகவும், இவற்றினை விழாக்கிரியைகள் உணர்த்துபவைகளாகவும் சைவாகமநூலான 'ஸ்ரீமத் பிம்பதந்தரம்" சிவோத்ஸவ்விதிபடலம் கூறுகின்றது. இவ்வாகமம் கூறும் மகோற்சவ உண்மையைச் சைவசமயநெறி எனும்நூலில் பொதுவிலக்கணத்து 346ம் திருக்குறளில் ஆறுமுகநாவலர் விசேடஉரை யிற்காண்க. கூடுதலாகப் பலநாட்களில் செய்யப்படும் பெருவிழாக்களில் ஒவ்வொரு நாளும் இக்கருத்துகளே தனித்தனியாக நடுவிலேயே சிறப்புடனே விளக்கிடுவனவாகச் செய்யப்படுகின்றனவாகும். கொடியேற்றமும், தீர்த்தவாரியுமே முதலும் முடிவுமான கருத்தைக் கொண்டவையாகத் திகழ்வனவாகும்.



விழா வகைகளின் பயன்கள்

"உத்ஸவம் என்பது (உத்+ஸவம்) உத்–சப்தபாஷிதம்; ஸவம்–சிருஷ்டி; அதாவது சிருஷ்டி மார்க் கத்தைக் குறிப்பது.

இவ்வுற்சவம் அறுவி தமும், வ்ருஷயாகாதி பக்தோத்சவாந்தம் பதினெண் கிரியையு முடையது.

1. பைத்ருகம்	–	12 நாள்	4. பார்த்சிவம்	–	5 நாள்
2. சௌக்யம்	–	9 நாள்	5, சாத்விகம்	–	3 நாள்
3. ஸ்ரீகரம்	–	7 நாள்	6. சைவம்	–	1 நாள்

இன்னும் பல விதங்களுமுண்டு. 18 கிரியைகள் முதலிய விவரங்களையும், அகோர சிவாசாரியார் இயற்றிய க்ரியாக்ரம ஜ்யோதி ஆறாம்பாகம், மஹோற்சவ விதி என்னும் நூலில் காணலாம்.

சூக்ஷ்மாகமப்படி உத்ஸவ தினங்கட்குப் பலன்

1 நாள் – ராஜா விருத்தி;
3 நாள் – சிவத்தைச் சந்தோஷிப்பித்தல்
5 நாள் – போகம்;
7 நாள் – சிவப்ரியம்;
12 நாள் – முத்தி;
13 நாள் – சர்வசித்தி;
15 நாள் – ஜனங்கட்கு சுகம்
17 நாள் – புண்யப்ர தம்;
19 நாள் – சர்வபாபஹரம்

காமிகாகமப்படிப் பலன்கள்

1 நாள் – சிவப்ரீ தி;
3 நாள் – கிராமரக்ஷை;
5 நாள் – பூதரக்ஷை;
7 நாள் – கிரிஜாப்ரியம்;
9 நாள் – லோகரக்ஷை
11 நாள் – புக்தி;
13 நாள் – சாந்நித்யம்;
15 நாள் – நரருக்கு சௌக்யம்
17 நாள் – நஜனங்கட்குப் புஷ்டி;
19 நாள் – புபூக்ஷ கட்கு விருத்தி
21 நாள் – சர்ததேவர்கட்கும் பிரியம்
12 நாள் – சுரருக்கும், சகலருக்கும் பிரீதி.

அயனம் முதலிய உற்சவபலன்

அயனோற்சவகட்கு – புண்யபலம்,

மாசோற்சவங்கட்கு – ராஜதோஷ, மாதோஷங்கள் நிவர்த்தி,

அமாவாசை – தாரா, புத்ராதி இஷ்டகாம்யசித்தியும் புண்யப்லமும்

பௌர்ணமி – சகலபாப நிவாரணம்

இவ்வாறே 27 நக்ஷத்ரோற்சவங்களுக்கும் பலன் சொல்லப்பட்டுள்ளது.

இன்னும் உள்ள விவரங்களை முன்னர்க் கூறிய மஹோற்சவ விதி என்னும் நூலில் காண்க.

விழாக்கால வேள்விச்சிறப்பு

உற்சவம் என்பது உத்மயாகம் எனவும், மேலான பஞ்சகிருத்யம் எனவும், சிருஷ்டி மார்க்கத்தை குறிப்பது எனவும், பக்தர்களுக்கு போகம் மோக்ஷங்களைக் கொடுப்பது எனவும் பொருள்படும். இத்தகைய ஆலயதெய்வவிழாவிற்கு வேதாகமவிதிமுறைப்படி வேள்வியைச் செய்திடுவர். அதில் அனைத்து தேவர்களுக்கும் ஆகுதிகள் அளிக்கப்பட்டு மகிழ்ந்திடுமாறு செய்யப்படுவது சிறப்பாகும். வேள்விச்சிறப்பினையும் அவசியத்தேவையையும் அறநூல்கள் விக்குவதாவது. என்றும் பரம்பொருள் வேள்வியில் இருந்து அருள்வது.

ஸஹ யக்ஞைர் ப்ரஜாஸ் ச்ருஷ்டா: புரோவாச ப்ரஜாபதி:
அனேன ப்ரஸவிஷ்யத்வம் ஏவ வோ(அ)ஸ்த் விஷ்டகாம துக்
தேவான் பாவயதானேந தே தேவா பாவயந்து வ:
பரஸ்பரம் பாவயந்தஸ் ச்ரேயப் பரம் அவாப்ஸ்யத
இஷ்டான் போகான் ஹி வோ தேவா தாஸ்யந்தே யக்ஞபாவிதா:
தைர் தத் தான ப்ரதாயைப்யோ யோ புங்க்தே தேன ஏவ ஸ:
யக்ஞ சிஷ்டா சினஸ் ஸந்தோ முச்யந்தே ஸர்வ கில்பிஷை:
புஞ்ஜதே தே த்வதம் பாபா யே பசந்த் யாத்ம காரணாத்
அன்னாத் பவந்தி பூதாநி ப்ரஜன்யாத் அன்ன ஸம்பவ:
யக்ஞாத் பவதி பர்ஜன்ய: யக்ஞக் கர்ம ஸமுத்பவ:
கர்ம ப்ரம்மோத்பவம் வித்தி ப்ரம்ம அக்ஷர ஸமுத்பவம்
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரம்ம நித்யம் யக்ஞே ப்ரதிஷ்டிதம்

இதன்பொருள்: வேள்விகளால் மக்கள் படைக்கப்பட்டனர் என்று ப்ரஜாபதி கூறினார். இதனால் வேள்வியே உங்களுக்கு விரும்பியதை அளிப்பதாகும். வேள்விகளால் தேவர்கள் மகிழ்விக்கப் படுபவர்களாகி தேவர்கள் மக்களை மகிழ்விக்கின்றனர். இவ்வாறாக ஒருவருக்கோருவர் தமது செல்வங்களை மாற்றிஅளித்து மகிழ்கின்றனர் என்பது அறியத்தக்கது.

எவ்வாறெனில் தெய்வங்களுக்கு விருப்பமான நெல், பயிறு, அன்னம், நெய், கனிவகைகள், மூலிகைவகைகள் இவற்றை விழாக்காலவேள்விகளில் நாம் ஹோமத்து ஆகுதிகளாகத் தியாகம்செய்து தேவர்களை மகிழ்விக்கிறோம். இதனால் தெய்வங்கள் வெள்விப்பகுதியில் வளத்தையும்,





கொடிமரம் மற்றும் வேள்வி மண்டபம்

வளம்தரும் வான்மழையையும், ஆரோக்கியமான இன்பவாழ்க்கையையும், வழங்குகின்றனர். அன்பானதியாகமே யாகம் எனப்படுவாதாகிறது. நம். பழங்கால பண்டமாற்றுமுறையால் மண்ணுலகமும் விண்ணுலகமும் மகிழ்ச்சியுறுகின்றன. இவ்விதமாக இவ்வுலகிற்கு வேள்விச்செயல் மேன்மைதருகிறது. யாகத்தாலேயே தேவர்கள் நமக்கு விரும்புவதைத் தருவர் தேவர்கள் நமக்கு எப்போதும் அளிப்பதில் சிறிதளவேனும் நாம் வேள்விமூலமாக அவர்களுக்கு அன்போடு அளித்திடவேண்டும் என்பதே அறநெறிவிதியாகும். இவ்வாறு நாம் தேவர்கடனை அளிக்காமல் தாமே அனுபவிப்பவர்கள் இவ்வுலகில் பாவிகள் ஆவர். வேள்விக்கு அளித்தது போக மீதமுள்ளவற்றை அனுபவிப்போர் ஸகலபாவத் திலிருந்தும் விடுபடுவர். வேள்வியே மழைக்குகாரணம். அதுவே பரம்பொருள் அந்த வேள்வியே சிறந்த அறச்செயல். வெள்வியால் மழையையும், மழையால் பயிர்வளமும் அதனால் உணவும் உணவால் உயிரினத்தின் வாழ்க்கையும், இவ்வுலகில் அமைகின்றன என்பதையே வேதாகமங்கள் கூறுகின்றன. யாகம் நம்முயற்சியால் தோன்றும்செயல் யாகச்செயலே உயர்ந்த அறச்செயலான கர்மபிரம்மம் என்று அறியயவும்.

பிரம்மம் என்பது அழிவற்றதாகும். அதனால் அது எங்கும் என்றும் வேள்வியில் நிலைபெற்று இருப்பதாகும். பரம்பொருள் வேள்வி மூலம் மகிழ்விக்கப்படுகிறது, என்று அறியத்தக்கது.

இவ்விதமாக ஆலய திருவிழாக்காலத்தில் எண்ணற்ற தெய்வங்கள் அழைக்கப்பட்டு உபசரிக்கப்படுகின்றனர், இதில் விழாநாட்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்புதெய்வம் கொடிமரத்தடியில் சிறப்புப்பொருட் தியாகமாகிய பலிதருவதால் மகிழ்விக்கப்படும் அனைத்து தேவலோகக் குழமத்தினரும் வேள்வியில் ஹவிர்பாகம் மூலமாக மகிழ்விக்கப்படுகின்றனர். மேலும் சிறப்பாகத் தேரில்இடம்பெறும் தேவர்கள் யாவரும் தேர்சாரந்த பொருள்களை வைத்து புனிதத்திற்கு செய்யப்படும் அதிவாஸயாகத்தில் போற்றப்படுகிறார்கள். எனவே



பத்மபீட வேள்வி மண்டபம்

தேரில் தெய்வதரிசனம் நமக்கு விருப்பப்பயன்களைப் பெற்றிட உதவும். நமது எண்ணங்கள் ஈடேறும். இவ்விதம் பிறவிப்பேற்றைப் பெற உதவுகின்ற பெரும்ஸாதனம் பெருந்தேர் திருவிழாவாகும் என்பதை ஆஸ்தீகப்பெருமக்கள் அறிந்து பயன்பெறவும்.

தேவாலய உத்ஸவம் (கோயில் திருவிழா)

தேவாலயங்களில் திருவிழாக்கள் **நித்யம், நைமித்திகம், காம்யம்** என்று மூன்றுவகையில் அனுசரிக்கப்படுகிறது. இவற்றுள் இந்த மூவகையிலும் தேரில் ஊர்வலம் அல்லது ராஜவீதிவலம் நடைபெறுகிறது. பழனி, திருச்செந்தூர் போன்ற பலதலங்களில் பெரிய திருத்தலக்கோயில்களில் தேரோட்டம் தினமும் நடைபெறுகிறது.

கோயிலில் உள்ள இறைவன் திருவிழாவில் புறப்பாட்டின்போது கருணையோடு உலகில்உள்ள சகல ஜீவராசிகளுக்கும் தனது காருண்ய அருட்பார்வையால் **சாம்பவீதீக்ஷையினை** செய்வித்து சேவார்த்திகளுக்கு, மனதில் மலபரிபக்குவத்தை உண்டாக்கி, இவ்விதம் மலநீக்கத்தைப்பெற்ற ஜீவான்மாக்கள் அனைத்தும் முக்திபேற்றினை அடையக்கூடிய அரிய வாய்ப்பினை ஆலயத்தில் நடத்தப்படும் உற்சவங்கள் ஏற்படுத்தி நமக்கு, பெரிதும் உதவிசெய்கின்றன. கோயிலின் மூலஸ்தானத்தில் பூஜிக்கப்படுகின்ற இறைவனே, உற்சவமூர்தங்களில் எழுந்தருளி, சுற்றுத் தெய்வங்கள் சூழ்ந்திருக்க கோயிலுக்குவெளியில் வீதிவலம்வருவதே உற்சவம் என்பதாகும். உற்சவமானது இறைவன் உயிர்களுக்குச்செய்து உதவுகின்ற ஐந்தொழில்களை உணர்த்துவதாகும். உற்சவக்கிரியைகள் பஞ்சகிருத்யங்களின் அம்சமுள்ள தத்வ பாவனைகளை விளக்கும் அரியசெயல்களாகும்.

உத்ஸவம் என்ற சொல் விளக்கம்

உத்ஸவம் என்றசொல் படைப்பாற்றலை உணர்த்துவதாகும், இதில் உத் + ஸவ என்ற இரண்டில் உத் என்பது உண்டுபண்ணுதலையும், ஸவ என்பது ச்ருஷ்டி என்பதையும் காட்டுவதாகும், உத் என்ற பதம் ஞானம்அளித்தலை குறிப்பதாகவும் ஆகும். இதனைக்கூறும் காரணாகமச்சான்று இதுவே.

ஸவ இத் யுச்யதே ஸ்ருஷ்டி: ததுத் ஸ்யாத் சப்தபாஷிதம்.

உத்பூதஸ் ஸ்ருஷ்டி காரித்வாத் உத்ஸ்வக் கதிதோ மயா.

மேலும் உத்தரகாரணாகமமானது புக்தியையும் முக்தி தரவல்ல தாகவும் சிறப்பித்துப் பொருள் கூறுகிறது. அதற்கான சான்று இதுவேயாம்.

உத் சப்தம் ஞான மித்யுக்தம் ஸர்வகல்யாண காரணம்.

போக மோக்ஷ மிதி ஞேயம் சதுர்வித மிதி ஸ்மிருதம்.

உத்ஸவம் என்பது பலவகைப்படும், ஒருநாளில்செய்வது முதலாக, மூன்று, ஐந்து, அல்லது ஏழுநாள் என்று செய்யப்படுவது உத்ஸவத்தின் ஒருவகை முறை. ஒன்பதுநாள் முதலாக இருபத்தேழுநாட்கள்வரை ஒற்றைப் படையான நாட்களில் செய்வது மஹோத்ஸவம் எனப்படுவது மற்றொரு சிறப்புமுறை.

மஹோத்ஸவம் (ப்ரம்மோத்ஸவம், பெருவிழா)

மஹோத்ஸவமானது ஒன்பது வகையாக உத்தமாதிபேதமாய் கூறப்படுகின்றன. **கொடியேற்றம்** முதலாக **கொடியிறக்கம்** வரையிலான கிரியைகளைக் கொண்டதாகச் செய்யப்படுவது **மஹோத்ஸவம்** அல்லது **பிரம்மோத்ஸவம்** என்பதாகும். உத்ஸவத்தை ஸூக்ஷ்மாகமம் உத்தமாதியாக ஒன்பது வகையில் கூறுகிறது. அவை 1,3,5 நாட்களில் செய்யப்படுபவை அதமத்ரயம் என்றும் 7,9,11 நாட்களில் செய்யப்படுபவை மத்யமத்ரயம் என்றும் 13,15,17 நாட்களில் செய்யப்படுபவை உத்தமத்ரயம் என்றும் கூறுகிறது. சுப்ரபேதாகமம் ஒன்பதுநாள் விழா உத்தமம் என்றும், ஏழுநாள் விழா மத்யமம் என்றும், ஐந்துநாள் விழா அதமம் என்றும் கூறுகிறது. உத்ஸவத்தில் மாஸத்தின் சிறப்பு நக்ஷத்திரத்தில் தீர்த்தவாரி செய்யப்படும். ஆகையால் இந்த உத்ஸவத்தை ஆண்டுதோறும் செய்யவேண்டும். இந்த மஹோத்ஸவமே மக்களுக்கு தீக்ஷைப்பயனைத் தருவது, பாவத்தை நீக்கக்கூடியது, ஸர்வமங்களத்தையும், ஞானத்தையும் தரவல்லது என்கிறது உத்தரகாரணாகமம். தீக்ஷையே விழா என்பதற்கான சான்று.

பரம் சாம்பவ தீக்ஷாக்யம் உத்ஸவம் பாபநாசனம்.

ஸர்வ கல்யாண மித்யுக்தம் உத்சவம் ஞான ஸம்பவம்.

தஸ்மாத் உத்ஸவ மாக்யாதம் உத்சவம் ப்ரதிவத்ஸரம். (காரணம்)

இந்த பெருவிழா எனும் மஹோற்சவம் என்பது **பேரீதாடனபூர்வகம், த்வஜாரோஹணபூர்வகம், அங்குரார்ப்பணபூர்வகம்** என்று மூன்று வகையில் துவங்கப்படும். இதனை மாலையில் துவங்கி, இரவில் முடிப்பர். இதில் ஏழாம் நாளிலோ அல்லது ஒன்பதாவது நாளிலோ **தேரோட்டம்** பகலில் மட்டுமே செய்யப்பட்டு அம்மாலையில் பரிகாரமாக ப்ராயச்சித்த அபிஷேகம் செய்யப்படும். உற்சவத்தின் க்ரியைகள் பலவாறாக பலஎண்ணிக்கையில் கூறப்படுகின்றன. **மஹோத்சவக்கிரியைகள் பதினெட்டு.** இதனால் **மஹோத்சவமானது 18** அஷ்டாதசக்ரியாவளியைக் கொண்டதாகும். அவைகள் முறையே 1.வ்ருஷயாகம் 2.த்வஜாரோஹணம்

3.ப்ருஹத்தாளம் 4.அங்குரம் 5.யாகசாலை 6.அஸ்த்ரயாகம் 7.யானக்ரமம் 8.பலிதானம் 9.பரிவேஷம் 10.நீராஜனம் 11.கௌதுகம் 12.தீர்த்தஸங்க்ரஹணம் 13.சூர்ணோத்ஸவம் 14. தீர்தோத்ஸவம் 15.த்வஜ அவரோஹணம் 16. ஸ்நபனம் 17. விவாஹம் 18.பக்தோத்ஸவம் ஆகியன பதினெட்டுகிரியைகள் என்று காமிகாகமம் கூறுகிறது.

உத்ஸவ யானக்ரமம் (விழாவில் சுவாமி புறப்பாட்டு முறை)

திருவிழாவில் சுவாமிபுறப்படுதல் என்பது மிகமுக்கியமான செயலாகும். இதற்கென மஞ்சம், ரங்கம், கேடகம், பல்லக்கு, வாஹனவகைகள், பெருந்தேர் முதலானவற்றை, முன்னதாகவே சரிசெய்து மேம்படுத்தி, தயார்நிலையில்உரிய இலக்கணத்துடனும் வலுவுடனுமிருக்கச்செய்வது விதிமுறை. ஒவ்வொரு விழாநாளிலும் ஒவ்வொரு விதமான வாஹனத்தை ஆகமங்கள் குறிப்பிட்டு புறப்பாட்டை முறைப்படுத்திக் கூறியுள்ளன. அவற்றினுள்

திவாகாலே ரதம் ஸப்தே ராத்ரௌ சேஷ மதாசரேத் என்று, காரணாகமம் பெருவிழாவில் ஏழாம்நாளில் தேரோட்டத்தினை விதிக்கிறது. வேறுசில சிவாகம உத்ஸவ விதிகளில்,

நவமே து ரதாரோஹம் தசமே து விமானகம் என்றும், **சப்தமே ரத மாரோப்ய அஷ்டமே துரகம் பவேத்** என்றும், ஆகமங்களில் கூறப்படுவதால் ஏழாவதுநாளில் அல்லது ஒன்பதாவதுநாளில் தேரோட்டம் விதிக்கப்பட்டுள்ளதை நாம் அறியலாம். பெரும்பாலும் பெருவிழாவில் தேரோட்டம் முக்கியத்வம்பெற்று விளங்குவதும், மறுநாள் விழாவானது நிறைவுபெறுவதும் அதிகமாக வழக்கில்உள்ள நடைமுறையாகும். எனவே கடைசிநாளைக்கு முந்தியதினம் ரதோற்சவம் செய்யத்தக்கது. யானக்ரமத்தில் ரதயாத்ரா தனிச்சிறப்புடையதாகும்.

கோயில்விழா

தெய்வப்புறப்பாட்டு விதிமுறை

சிவனது மஹோத்ஸவத்தின் ஊர்வலபுறப்பாட்டு நெறிமுறைகளாகிய யானக்ரமம் பற்றி இனிகாண்போம். கோயிலில் உத்ஸவம் துவங்கப் படுவதற்கு பலநாட்கள் முன்னதாகவே வாஹனாதிகளை, அதாவது தேவாலயம், ஆலயத்தினுடைய மண்டபங்கள், வாஹனங்கள், தேர் வீதி உலாவிற்கான தளவாடப்பொருட்கள், உபசரிப்புக்கொடை, தீபஇஷ்டி, (தீவிட்டி), வண்ணக் கொடிகள், தீபதண்டவகைகள், விதானம் (மேல்கட்டுவிரிப்பு), பதாகை (புகழ்பலகை, சின்னங்களின்பதாகை), அஷ்டமங்களம், தசாயுதங்கள், பலவகை இசைக்கருவிகள் முதலானவற்றை சுத்திகரித்தும், தூய்மைப்படுத்தியும், புதுமைப்படுத்தியும் ஏற்றவகையில்உரிய சீர்திருத்தங்கள் செய்துமுடித்திடவேண்டும். ஆலயம், கோபுரம், மண்டபம், ஓய்வுமண்டபங்கள், ஆலயசுற்றுப் பகுதிகள், வீதிகள் இவற்றை சமப்படுத்தியும், இவற்றில் இருக்கும் புற்கள், செடிகொடிகள், முட்கள், தடைகள், தூசிகள் இவற்றை அகற்றியும், ஊர், வீதி, ஆலயம் இவற்றை வாழைமரம், மாவிலை, தென்னங்குலை, கரும்பு, வண்ணத்துளிகள், தோரணமாலை முதலியவைகளால் நன்கு அலங்கரிக்கவேண்டும். ஸர்வவைபவங்களுடன் முதலில் கிராமதேவதையான பத்ரகாளிக்கு அவளது கோயிலில் காளீஉத்ஸவத்தைச்செய்து, பின்பு விநாயகருக்கு சிறப்பூபூசையுடன் அப்பம், மோதகம் நிவேதித்து, விநாயகருக்கு உத்ஸவத்தைச்செய்து, பிறகு மறுநாள் சிவோத்ஸவத்தின் துவக்கத்தைச் செய்திடுவதே ஆகமமுறையாகும்.

சிவனார் பார்வதிதேவீ

இவ்விதமாக வீதிகள் வாஹனாதிகளை அலங்கரித்து, சிறியதேரிலோ, ரங்கத்திலோ, கேடகத்திலோ, எடுப்புப்பல்லக்கிலோ, பலவகை அலங்காரத்தோடும், புஷ்பபிரபைகளுடனும் கூடியவாறு தேவனை தேவியுடன் மூலஸ்தானத்திற்கு கொண்டுசென்று ஆவாஹித்து, பூசித்து, தூபதீபங்களைச்செய்து புஷ்பாஞ்ஜலிகளால் அர்ச்சித்து, சக்திபேரம் முதலாக, பக்தபேரத்தோடும் கூடியதாக, தேவனின் சிவபெருமானது கிராமபிரத‘ஜீணமாக, நகர்வலவீதி உலாவரும் சுற்றுப்பயணத்தை, புறப்பாட்டைத்துவக்கவேண்டும். திருவீதிஉலா வரவேண்டியதன் விதிமுறையில் முன்னதாக அலங்காரத்துடன் கூடியவைகளாக பேரி (முரசு), உடுக்கை, படஹம் (தம்பட்டம்), ஜல்லரீ (ஜால்ரா), சங்கு, எக்காளம் (கரஹளம்), மத்தளம், மிருதங்கம், குழல், தாளவகைகள், பஞ்சமுகவாத்யம் முதலான 18வகையான உத்ஸவத்திற்கு உரியவாத்தியங்களுடன் பயணத்தில் வீதியில் உடன்செல்லும் சைவர்களும், இவர்களுக்கு இடையில் முறையே அதிகாரநந்திகேச்வரரும், பிறகு விநாயகர், பிறகு சுப்ரமண்யர், நடுவில் தேவியுடன்கூடிய சோமாஸ்கந்தர், முன்போ அல்லது பின்புறத்திலோ பக்தபேரங்கள், அதன்பிறகு சண்டேச்வரர் என்று இம்முறை யிலேயே தெய்வங்களின்மூர்த்தங்கள் வீதிஉலா நகர்வலப்புறப்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

வீதிஉலாவரும்பொழுது அர்ச்சகரும், அதிகாரிகளும் தவறாமல் உரியமுறையிலே தேவனின் உடனேயே வரவேண்டும். பயணத்தின் துவக்கம் முதல் வீதிஉலாவருதலின் முடிவு வரை தொடர்ந்துவரவேண்டும். இதன் முறைகளும் ஆகமங்களில் கூறப்படுகின்றன. காப்புக் கட்டிக்கொண்டுள்ள ஆசாரியர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர், சீடர், உறவினர் இவர்களில் ஒருவர் தவறாமல் தேவனுக்கு வலதுகைப்பக்கத்தில் இருந்துகொண்டு, வீதிஉலா வருகையில் மூலமந்திரம் அல்லது அகோரமந்திரத்தை எண்ணிக்கைக் கணிப்பின்றி ஜபித்தவாறு உடன்வரவேண்டும். தேவனுக்கு இடதுபாகத்தில் அரசன் அல்லது தர்மகாதிகாரி ஒருவர் சாமரம் வீசியவாறோ, வணங்கியபடியோ உடன்வரவேண்டும். இதனைக்கூறும் சான்று,

கணிகாநடனைஸ் ஸார்தம் ராகாநுக்கிரமதஸ் தத: .
வீணா மிருதங்க பேரி யப்ஜ தாள ஸ்வஸ்திக மல்லரீ .
படஹாநக கண்டாத்யா: வாதயேத் தேவதிருப்தயே.
காந்தாராத்யைஸ் ஸ்வரைஸ் ஸம்யக் கானம் குர்வீத பக்தித: .

இவ்வாறு தேவனுக்கு எதிர்புறத்தில் நர்த்தகர், குழல்ஊதும்கிற வம்சகர், பாடுகிற காயகர், மிருதங்கம்வாசிக்கிற மத்தளகர் ஆகியோரும், இருபக்கங்களில் நிருத்தத்துடனேயே வருகின்ற ருத்திரகணிகா

நாட்டியமாதர்கள், முன்புறதத்தில் மஹாசைவர்கள், பின்புறத்தில் வேதாதி கோஷங்களை எழுப்பியவாறு தொடரும் வேதப்பிராம்மணர்கள், அதனைத்தொடர்ந்து நால்வகை வருணத்தார்களான மாஹேச்வரஅடியார் பெருமக்கள், பொதுமக்கள் யாவருமாக இவ்விதம் தொடர்ந்து முறையே பயணத்தில் அன்புடன் மதித்து, இறைவனுடன் பின்தொடர்ந்து செல்ல வேண்டும். இவ்விதம் உத்ஸவத்தில் இறைவனோடு செல்பவர்கள் அச்வமேதயாகம் செய்த பயனை அடைவார்கள். வீதிசுத்தம் செய்யப்படாத நிலையிலும், வீதியில் புனிதம் மற்றும் மகிழ்ச்சியற்ற நிலையிலும், அலங்கரிக்கப்படாத நிலையிலும் (குப்பைகளை நீக்கிப்பெருக்கி) வீதியை சுத்தம் செய்யப்பட்டு நீர்தெளிக்கப்படாத நிலையிலும், வாத்தியஓசை இல்லாமலும், பக்தர்கூட்டத் தொடர்ச்சி இல்லாமலும், தனியாகவும், தெய்வத்திற்கு புறப்பாட்டை ஒருபோதும் செய்யக்கூடாது. மேலும் மழையில் தெய்வம் நனையாதவாறு மேல்கூரை (விதானம்) 4காலில் மூலைகளில் உடனேயே பிடிக்கப்படவேண்டும். ராஜாவிற்கு உரியஉபசரிப்புகள், கொடை, சாமரம் போன்றவை தவறாது உடனிருத்தல் அவசியம். இவை குறைவுபடின் பரிகாரத்தைச் செய்யநேரிடும். இவ்விதமாக தேவனை யானகிரமத்தில் மகிழ்வித்தல்முறை. மேலும் உத்ஸவ ஊர்வலத்திற்கு பகலில் ரங்கம், மஞ்சம், சிபிகை (பல்லக்கு), விமானம், கேடகம், பிரபையுடன்கூடிய பீடவகைகள் இவற்றில் உத்ஸவமூர்த்தியை எழுந்தருளச்செய்யலாம். உத்ஸவத்திற்கான வாஹனங்களை ஒவ்வொருநாளும் ஒவ்வொருவகையில் ஆகமங்களில் கூறப்பட்டபோதிலும், அவற்றுள் ஏதேனும் ஒருவரிசைமுறையினை பின்பற்றி கையாளுதல் முறையாகும். சிலதினங்களிலோ, ஒருநாள் விழாவிலோ, பகலிலும் சிறப்புவாஹனங்களை கைக்கொள்ளலாம். தேர்த்திருவிழாவானது எப்பொழுதும் பகலில்மட்டுமே, தேரேற்றம் (ரதாரோஹணம்) செய்யப்பட்டு மாலையில் ரதாவரோஹணம் செய்யப்பட்டுஉரிய மூலஸ்தானத்தை அடைவிக்கவேண்டும். கட்டுத்தேர் (சிறுதேர், சப்பரம், முத்துத்தேர், கிண்ணித்தேர்கள்) வகைகளைமட்டுமே இரவில் செய்யலாம். தேவதைக்குஏற்ப வாஹனங்களின் வகைகளும், வரிசைமுறைகளும், உத்ஸவத்தின் நாள்கணக்கிற்குஏற்ப வாஹனம் வேறுபாடு உடையதாகும்.



இவற்றை ஆகமங்களில் உள்ளவாறு முதலில் அறிந்து, தேர்வுசெய்து, முடிவுசெய்து அதனைபிறகு மாற்றாது, தொடர்ந்து பின்பற்றவேண்டும். பெருவிழாவில் விரும்பியவாறு இதனை செயய்க்கூடாது. வீதி உலாமுடிந்து, மீண்டும் ஆலயகோபுரத்தடி அல்லது வாயில்எதிரில் சுவாமிவரும்பொழுதில், அங்கு சிறிதுநேரம் இளைப்பாறச்செய்து, ஸகலரும், வாத்யகாரர்கள், நாட்டியநங்கையர் முதலாக வலம்வருதலாகிற பரிவேஷணத்தையும், ருத்ரகணிகையர், காளிதீபம், கும்பதீபம் தாங்கி, திருஷ்டிதோஷம் நீக்கிடும் தீபநீராஜனத்தையும் செய்துமுடித்து, பிறகு ஆரத்திஎடுத்து, இறைவனுக்கு பாததீர்த்தம்அளித்து, வரவேற்று கோயிலுக்குள் புகச்செய்து, உரியமண்டப இருக்கையில்சேர்த்து பின்பு நீராட்டிப் பூசித்தல் யானகிரமம் எனப்படுகிறது.

உத்ஸவபேர யானகிரமம், (சுவாமிபுறப்பாட்டு விதிமுறை)

தினமும் இருவேளையும் வீதிஉலாவருவதைச் செய்தல் அவசியம். இதற்கான சான்று,

யானம் பிரதிதினம் குர்யாத் அன்ஹிராத்ரௌ மஹோத்ஸவே.

ரதாதௌ சிபிகாதௌ வா பரிசாரக மூர்தகு. (காமிகம்).

உத்ஸவத்தில் யானகபேரமான உத்ஸவமாகேசமூர்த்திகள் சூக்ஷ்மாகமப்படி முதல்நாளிலிருருந்து 9நாளைக்கு முறையே 1.சந்திரசேகரர், 2.உமார்தர் (அர்நாரீசர்), 3.விருஷபாரூடர், 4.கௌரீசம்வாதலீலாமூர்த்தி, 5.கஜஹாரீ, 6.உமேசர் (சாம்பவர்), 7.கல்யாணசுந்தரர், 8.திரிபுரக்னர், 9.காலஹாரீ (மிருத்யுஞ்ஜயர்) என்று அறியவும். ஒன்பதுநாளுக்கும் இவ்விதம் ஒன்பது மூர்த்திகள் இல்லாதபொழுதில், எல்லாநாளும் சோமாஸ்கந்தர்பேரம் ஒன்றே சிறந்தது ஆகும். அந்தந்ததேவதைக்குத் தகுந்தவாஹனங்களை முறைப்படிஅறிந்து அவற்றையே உபயோகிக்கவும். சிவனுக்கு முறையே சூக்ஷ்மாகமத்தின்படி புறப்பாட்டுமுறை 1) கப்ளீ, 2) பூதம், குண்டோதரன், 3) விருஷபம், 4) முத்துபிரபை, 5) யானை, 6) புஷ்பகவிமானம் (புஷ்பயானம்) (பூப்பலக்கு), 7) சியந்தனம் (சப்பரத்தேர;), 8) குதிரை, 9) சிபிகை (பல்லக்கு) என்பவை ஒன்பது தினங்களின் புறப்பாட்டு வாஹனங்கள் ஆகும். வாஹனங்கள் இல்லாதபொழுதில் சிபிகையில் (பல்லக்கில்) யானத்தைச் செய்யவேண்டும். மழை முதலான ஏதோஒரு காரணத்தினால் கிராமப் பிரதக்ஷிணம் செய்யப்படவில்லை என்றால் திசாஹோமத்தைச் செய்யவேண்டும். இதனைக் கூறும் சான்று, **'கிராமப்பிரதக்ஷிணேஹீனே திசாஹோமம் து காரயேத்".** என்கிறது காமிகாகமம். மேலும் ஒவ்வொரு கிரியைகளையும், உரியகாலத்திற்குள் செய்துமுடித்து, உதஸ்வத்தை காலத்திற்குள் செய்வதே பயனத்ருவனவாகும் எனக்கிறது காமிகாகமம். இதற்கு சான்று,

ஸ்வகாலே அனுஷ்டிதாஸ் துவேதா: கிரியாஸ் ஸர்வார்த்த ஸாதகா: .

உக்தகால பரித்தியாகே சாந்திஹோமம்ச காரயேத்

என்று குற்றமாகிய அந்த காலாதீதத்திற்கு காலம்கடந்த தாமதத்திற்கு பிராயச்சித்தத்தையும் கூறி மிகவும் பெருமுயற்சியோடு உத்ஸவத்தை உரியகாலநேரத்திற்குள்ளாக செய்துமுடிக்க வேண்டும் என்று காமிகாகமம் கட்டளைஇட்டுள்ளது. மகோத்ஸவகாலத்தில் மூலமூர்த்திமுதலாக சண்டேசர்வரையிலாக அனைத்து மூர்த்திகளும், யானகமூர்த்தியுடன் செல்வதாகவும் கூறப்பட்டு உள்ளதால் மஹேசரின் ஊர்வலம்வரும் யானகாலத்தில் மூலபேரத்தை தரிசித்தல்கூடாது. உத்ஸவர் வெளியில் உள்ளபோது அறியாமையாலோ, ஆசையாலோ மூலவரை தரிசித்தால், உத்ஸவரை நிந்தித்தபாவியாகி, குருடனாக ஆவார்கள் என்கிறது ஆகமம். இவ்வாறு மூலபேரதரிசனத்தின் விதிமுறை பயனுக்குரிய சான்று,

மூலாதி சண்ட பர்யந்தம் உத்ஸவே யானகம் பவேத்.

மஹேச யான காலே து மூல பேரம் ந தர்சயேத்.

மோஹேன தர்சயேத் வித்வான் அந்தத்வம் ஸமவாப்நுயாத்.

உத்ஸவயான இயந்திரமுறை வாகனாங்கள்

உத்ஸவத்தில் சிறப்பாக செயல்படத்தக்க முறையில், வடிவமைக்கப்பட்ட உருவயந்திரங்களை காமிகாகமம் கூறிஉள்ளது. காலையில் 9நாளும், மஞ்சம், விமானம், பல்லக்கு, இவற்றில் ஒன்றில் ஊர்வலத்தையும், இரவில்மட்டும் உரியவாஹனங்களை, அதாவது அசையும் யந்திரங்களை பயன்படுத்தலாம். அவை முதல்நாள்முதலாக முறையே 1–ல் விருஷயந்திரம், 2–ம்நாளில் சுற்றக்கூடிய பிராமகயந்திரம், அசையும் துதிகை அல்லது காது உடைய கெஜயந்திரம், 3–வது அசைந்தாடும் ஊஞ்சல்யந்திரம், அசையும் அல்லது பாயும்குதிரை அச்வயந்திரம், துள்ளும் சிம்மயந்திரம், ஒளிரும் தீபயந்திரம், நகரும் (ஆடு) மேஷயந்திரம், நகரும்தேர் ரதயந்திரம் முதலியன உத்ஸவயந்திர வகைகளாகும்.



அசையும் துதிக்கையுள்ள கஜயந்திரம்

தெய்வங்களின் ஊர்வலத்தின் பயன்கள்

கோயில் திருவிழாவில் சிவபெருமாள் திருவீதி வலம்வந்து அருள்செய்து, மூன்று உலகங்களையும் காத்தருளும் பொருட்டும், யக்ஷர், ராக்ஷஸர், அசுரர், பைசாசர் முதலிய துஷ்டர்களை ஒடுக்கி ஒட்டும் பொருட்டும், தேவர்கள் மனிதர்கள் முதலிய சிஷ்டர்களை நல்லோர்களை அனுக்கிரகித்தல் பொருட்டும் செய்யப்படுவதாகும். விழாக்கால வீதி உலாவில் இறைவனை சேவித்தலின் பயன் புராணங்களில் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக காஞ்சீபுராணத்தில்

கல்வரைப் பிராட்டி செவ்வே ளைங்கரன் கணங்கள் சூடி
பல்வகை யூர்தி யும்பர்ப் படமொளி யரச வீதி
யெல்லையி லுயிர்கட் கொல்லா மென்னருங் கருணை பூத்துப்
புல்கொளித் திருவே கம்பன் றிருவுலாப் போதச் செய்வோர்.

மேதகு தவந் தானங்கள் வேள்விக ளனைத்துஞ் செய்தோர்க்
கோதிய பயத்திற் கோடி யுடையராய்க் கோடி கோடி
யேதமில் குலத்தினோடு மெம்பிரா னுலகில் வாழ்ந்து
சாதலும் பிறப்பு மில்லாத் தத்துவந் தலைப்பட் டுய்வார்.

அதிகாரநந்தியில் சிவனார் பார்வதி திருக்காட்சி

ஸ்ரீவிநாயகர் துதி

ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங் கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறை யிதழித் தாழ் சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உரு கோட்டன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திரு கோட்டும் அயன் திருமால் செல்வமும்
ஒன்றோ எண்ணச் செய்யும் தேவே.

(திரு அருணந்தி சிவாசாரியார்)

நவதின கணேசோத்ஸவ யானக்ரமவிதி

பிரதமம் மூஷிகா ரூடம் த்விதீயம் சிகி வாஹனம்.
திருதீயம் பூ தவாஹம்ச சதுர்த்தம் விருஷ வாஹனம்.
பஞ்சமம் சக்தி கல்யாணம் ஷஷ்டம் வை கஜ வாஹனம்.
ஸப்தமம் து ரதா ரூடம் அஷ்டமம் மிருக யாத்ரகம்.
நவமம் நிருத்த ராஜம் ச தசமம் தீர்த்த முச்யதே. - (சிந்தியாகமம்)

பிரதமம் மூஷிகா ரூடம் த்விதீயம் பிஞ்ச வாஹனம்.
திருதீயம் பூத ரூபம் ஸ்யாத் சதுர்த்தம் ஸிம்ஹ வாஹனம்.
பஞ்சசம் து கஜா ரூடம் ஷஷ்டம் வை விருஷ வாஹனம்.
ஸப்தமம் துரகா ரூடம் சுரத்ரும மதாஷ்டமே.
நவமம் ரத மாரோப்ய தசமம் தீர்த்த முச்யதே. - (சுவாயம்புவம்)

மூஷிக வாகனம்
(பெருச்சாளி / மூஞ்சூறு ஊர்தி



மூஷிகவாகனப் பெருமை

விநாயகர் தெய்வவழிபாட்டிலும், மக்களின் வாழ்வியல் நெறிகளிலும், முதலிடம்பெற்று உயர்வுடன் விளங்குகின்றார். அற்புதத் திருமேனிகொண்ட யானைமுகத்தோனாகிய விநாயகர் எளிய ஜீவனாகிய எலிக்கும் தெய்வநிலையைத் தந்தருளி வாகனமாகக் கொண்டுள்ளார். மூல முதல்வனாகிய விநாயகக்கடவுளின் வாகனமான மூஞ்சூறு, எலிஇனத்துள் உயர்தரவலிமைமிக்கதான பெரியவகையாகும்.

எனவே இது "பெருச்சாளி" என்று அழைக்கப்படுகிறது. பிள்ளையார் மூஞ்சூறுவாகனத்தினை அமைத்துக்கொண்ட நிலையை புராண வரலாறு விளக்குகிறது. அதாவது, ஒருசமயம் இந்திரசபையில் வாமதேவமகரிஷியை கிரௌஞ்சன் என்ற பெயருடைய கந்தருவன் ஒருவன் அவமதித்தான். இதனால் வெகுண்ட அம் மகரிஷியின் சாபத்தால் பெரியஎலியானான். பின்பு "பராசரர்" விநாயகரை வேண்டிக்கொண்டதனால் விநாயகர் அவனை ஒடுக்கி, அடக்கி அவன் விரும்பியபடி தனக்கு வாகனமாக ஆக்கிக்கொண்டார். இதுவே மூஷிக வாகனம். என்றும் "ஆகுவாகனம்" என்றும் கூறப்படும்.



மூஷிகவாகன வடிவம்

மூஷிகவானமாது சாம்பல்நிறமும் அல்லது கருமைநிறமும், குறுகின கால்களும், பருத்த உடலும், உயர்த்திய தலையும், உடையதாகும். நான்கு கால்களால் நாற்புறமும், வயிற்றுப்புறத்தே குத்துக்கால் அமைப்புடனும், வால்புறத்தே வாலாலும் தாங்கல் பெற்றுள்ள வாகனமாகும். சிலர் இதனை முன் இருகால்களைப் பருத்த பலாப்பழம் ஒன்றின்மேல் வைத்திருப்பதாகவும் அமைத்திடுவர். கழுத்தில் மணிமாலைகளுடனும், கால்களில் தண்டையுடனும், முதுகில் பத்மபீடத்துடனும், இந்த வாகனம் முகத்தை உயர்த்தி, வலதுகாலை முன்வைத்து நடக்கும்கோலத்தில் வடிவமைக்கப்படும்.

விநாயகர் துதி

திகட சக்கரச் செம்முகம் மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுரை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

(கந்தபுராணம்)

பெருச்சாளி வாஹனத்தில்
விநாயகப்பெருமான்

விநாயகர் வாஹன வீதிஉலா அட்டவணை

1. ஆகமம் : சிந்தியாகமம்

விழா தினம்	இரவு வீதிஉலா வாஹனம்
1–ம் நாள்	மூஷிக வாஹனம்
2–ம் நாள்	மயில் வாஹனம்
3–ம் நாள்	பூத வாஹனம்
4–ம் நாள்	விருஷப வாஹனம்
5–ம் நாள்	கற்பகமர வாஹனம்
6–ம் நாள்	யானை வாஹனம்
7–ம் நாள்	தேர் பவனி
8–ம் நாள்	குதிரை வாஹனம்
9–ம் நாள்	நடராஜர் சபா மண்டபம்
10–ம் நாள்	விமானம் (12கால் மண்டபம்)

2. ஆகமம் : சுவாயம்புவாகமம்

விழா தினம்	இரவு வீதிஉலா வாஹனம்
1–ம் நாள்	மூஷிக வாஹனம்
2–ம் நாள்	மயில் வாஹனம்
3–ம் நாள்	பூத வாஹனம்
4–ம் நாள்	சிம்ம வாஹனம்
5–ம் நாள்	யானை வாஹனம்
6–ம் நாள்	எருது வாஹனம்
7–ம் நாள்	குதிரை வாஹனம்
8–ம் நாள்	கற்பகமர வாஹனம்
9–ம் நாள்	தேர் பவனி
10–ம் நாள்	பல்லக்கு

3. கோயில் எடுத்துக்காட்டு விழாவாஹன மரபு (பிள்ளையார்பட்டி)

விழா தினம்	இரவு வீதிஉலா வாஹனம்
1-ம் நாள்	மூஷிக வாஹனம்
2-ம் நாள்	சிம்ம வாஹனம்
3-ம் நாள்	பூத வாஹனம்
4-ம் நாள்	கமல வாஹனம்
5-ம் நாள்	விருஷப வாஹனம்
6-ம் நாள்	விமானம் (மரக்கோயில்)
7-ம் நாள்	மயில் வாஹனம்
8-ம் நாள்	தாவும்குதிரை வாஹனம்
9-ம் நாள்	தேர். யானை வாஹனம்
10-ம் நாள்	பஞ்சமூர்த்திகள் திருவீதிஉலா





விநாயகருக்கு ஏற்ற வாஹனங்கள்



மூஷிக வாஹனம்



சிம்ம வாஹனம்

மயில் வாஹனம்



விருஷப வாஹனம்



கற்பகமர வாஹனம்



யானை வாஹனம்

பூத வாஹனம்

குதிரை வாஹனம்

விநாயகருக்கு ஏற்ற வாஹனங்கள்



கமல வாஹனம்



எருது வாஹனம்

விமானம்

தேர்



நடராஜர்விழா ஸபை



பல்லக்கு

விழாத்தெய்வத்தின் வீதிஉலாகாட்சிகள்



மூஷிக வாஹனத்தில் பிள்ளையார்



யானை வாஹனத்தில் பிள்ளையார்



குதிரை வாஹனத்தில் பிள்ளையார்

சிம்ம வாஹனத்தில் பிள்ளையார்

மயில் வாஹனத்தில் பிள்ளையார்

நந்தி வாஹனத்தில் பிள்ளையார்



மூஷிக வாஹனத்தில் பிள்ளையார்

பூத வாஹனத்தில் பிள்ளையார்



யானை வாஹனத்தில் பிள்ளையார்

மண்டபத்தில் பிள்ளையார் திருக்காட்சி



பத்மபீட வாஹனத்தில் பிள்ளையார்



கற்பகமரத்தடி/தேரில் பிள்ளையார்

திரு ஆலவாயப்பன் துதி

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே (அப்பர்–ஆறாம்திருமுறை)

நவதின சிவோத்ஸவ யானக்ரமம்

பிரதமே திவஸே மஞ்சம் ஸிம்ஹபீடம் த்விதீயகே.
கைலாசம் து த்ருதீயேன்ஹி சதுர்த்தே பூத வாஹனம்.
பஞ்சமே கஜ யாநம் ஸ்யாத் ஷஷ்டே விருஷப வாஹனம்.
ஸப்தமேது ஏகபீடம் ஸ்யாத் அஷ்டமே வாஜி வாஹனம்.
நவமே து ரதாரோஹம் தசமே து விமானகம்.
ஏதத் ஹீனதினாநாம் து பூர்வம் தியக்த்வா பரம் மதம். (சிவாகமம்)



உ. மற்றொருமுறை

பிரதமம் ரங்கமேவோக்தம் ராத்ரௌது ஹம்ஸ மேவச.
துவிதீயே சூர்யயந்த்ரம் ஸ்யாத் ராத்ரௌது சந்திரமண்டலம்.
திருதீயே பூதமேவோக்தம் ராத்ரௌது ஸிம்ஹ மேவச.
சதுர;த்தே ப்ராதர் நாகம் து ராத்ரௌ விருஷப மேவச.
பஞ்சமே சைவநந்தீ ஸ்யாத் ராத்ரௌ தசசிரஸ் ததா.
ஷஷ்டே சைவதினே ப்ராதர் சிபிகாரோஹணம் ததா.
சூர;ணோத்ஸவம் க்ரமேணைவ கஜயந்த்ரம்து ராத்ரிகே.
பி‘லீடணம்து அஷ்டம்யாம் ராத்ரௌது அச்வவாஹனம்.
தத்தினேசைவ ஸாயான்ஹே மிருகயாத்ராம் விசேஷத :
நரயுக்தம் து சிபிகம் நவாஹே ப்ராத ரேவச.
ராத்ரௌது கல்பவிருக்ஷஸ் ஸ்யாத் உத்ஸவம் ஸம்ப்ரகீர்திதம்.
ததூர்த்வே கிருஷ்ணகந்தம் ஸ்யாத் நடேசோத்ஸவ மாசரேத்.
ஸிம்ஹாஸநம் து தசமம் ராத்ரௌ விருஷப மேவச.
ஏகாதசதினே ராத்ரௌ விமானோத்ர ப்ரசஸ்யதே.
ஏவம் யானேஷு கர்த்தவ்யம் உத்ஸவம் காரயேத் குரு :

(உத்தரகாமிகாகம உத்ஸவவிதிபடலம் 6)

3. மற்றொருமுறை

பிரதமம் சிபிகாயாநம் ராத்ரௌச ஹம்ஸ மேவச.
த்விதீயம் சூர்யவிருத்தம்ச ராத்ரௌது சந்திர மண்டலம்.
திருதீயம் ஸிம்ஹமேவோக்தம் ராத்ரௌச பூத மேவச.
சதுர்த்தம் வாசுகீஸ்சைவ ராத்ரௌ மகர மேவச.
பஞ்சமே ப்ராதர் மஞ்சம் ஸ்யாத் ராத்ரௌ விருஷப மேவச.
ஷஷ்டம்து கேடகம்சைவ கஜயந்த்ரம்து ராத்ரகே.
திவாகாலே ரதம் ஸப்தே ராத்ரௌ சேஷமதாசரேத்.
புருஷாமிருக மஷ்டம்யாம் நிசாயாம் வாஜிவாஹனம்.
நவமம் பீடமேவோக்தம் நிசாயாம் வியாக்ர யாநகம்.
ததூர்த்வே கிருஷ்ணகந்தம் ஸ்யாத் நடேசோத்ஸ்வமாசரேத்.
சிம்மாஸனம்து தசமம் ராத்ரௌ தசசிரஸ் ததா.
ஏகாதசம் விமானம் ஸ்யாத் தேவ்யாம் ஸமரபூபகம்.
ஆலாலம்பே அம்பிகாயாம் வாஹனஸ்ய விதீயதே. (காரணாகமம்)

ரங்கமண்டப அமைப்பு

மகுடமண்டபாத் பூர்வேஸெம்யே வாதக்ஷினே(அ)தவா
நைருதேசாநதேசேவா கல்பயேத் ரங்கமண்டபம்
மண்டபம் வா ப்ரபாம் வாஅபி கூடாகார மதாபிவா
விமானாக்ருதிகம் வாபி கல்பயேத் ரங்கமண்டபம் (சூக்ஷ்மாகமம்-70)



புருஷாமிருக வாஹனத்தில் சிவனாரும் பார்வதியும் உலாவருதல்

விருஷபவாகனம்



விருஷப வாகனப்பெருமை (தனிச்சிறப்புகள்)

ஸர்வவல்லமைபெற்ற முழுமுதற்கடவுளான சிவனாரின் சிறப்பு ஊர்தி காளைமாடு. வாஹனம். இடம்விட்டு இடம் பெயர ஏறிச்செல்ல விலங்கினங்களை ஈடுபாட்டுடன் தாம் கண்ட தெய்வங்கட்கு ஊர்திகளாக அமைத்து வழிபட்டு மகிழ்வது மரபு. இவ்வழக்கம் தொடாந்து புராண இதிகாசங்களில் விளக்கமுற்று ஆகமங்களில் அடைவுமுறை காணப்படுகின்றன. ஆகமநெறிப்படியே தெய்வங்களுக்கு வாகனங்கள் அமைத்து வழிபடும்செயல் பக்திநெறியுடன் வழிபாட்டு வழக்கில் வளர்ச்சிபெற்றுள்ளது. வாஹனம் என்ற சொல்லுக்கு தம்மீது தாங்குவது என்பது பொருள். உபமன்யுமுனிவரால் பிர்மாவிடமிருந்து அறிந்து கூறப்பட்ட சிவஸஹஸ்ரநாமதுதியில், வ்ருஷரூபர், கவாம்பதி:, கோபதி:, உக்ஷ:, வ்ருஷாரூடர் என்ற பெயர்கள் சிவனைக்குறிக்கின்றன. விடைஏறிய சிவனை வணங்குதல் சாலச்சிறப்பாகும்.

விருஷபவாகனர், விருஷபாந்திகர், விருஷபாரூடர், விருஷயானகர் என்றபல மாகேசமூர்த்திகள் காளைமாட்டுடன் கூடிய அமைப்பு உடையவை. விருஷபம் என்பது தமிழில் எருது, விடை, களிறு, ஏறு என்று பலபெயர்பெறும். தமிழ் திருமுறைகளில் இறைவனைக்கண்ட அருளாளர்கள் தமது பாடல்களில் சிவனை பலவாறாக, விடைஏறி, எருதுஏறி, என்று குறிப்பிடுவார். எடுத்துக்காட்டாக

1. ஞானசம்பந்தர் : சீர்காழியில் விடையேறி என்றும், திருமருகலில் விடையாயெனுமால் என்றும் குறிப்பிடுகிறார்.

2. அப்பர் : “மட்டுவார்குழலாளோடு மால்விடை – இட்டமாய் உகந்து ஏறும் இறைவனார்” என்று திருச்சிபதிகத்திலும்,

"ஏறுவருவன கண்டேன்" என்றும் திருப்புலூரில் "ஆண் ஏறு ஊர்ந்தாய்" என்றும், திருமழபாடியில் "ஏறுஏறி எங்கும் திரிவான் கண்டாய்" என்றும், திருவையாற்றில் "காதன் மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்" என்றும், "கடியநடை விடைஒன்று ஏறும் காரணனை" என்று கூறியுள்ளதாலும் அறியலாம்.

3. சுந்தரமூர்த்திசுவாமிகள்: திருத்தினைநகரில் "எருது ஏறும் மூர்த்தியை" என்றும், ஏறு உகந்தானை என்றும், ஏறு உகந்தேறி என்றும், விடைமேற்கொள்விதிர்தன் என்றும், விடையுடையான் என்றும், "பெற்றம் ஏறு உகந்து ஏறவல்லானை" என்றும் திருவதிகையில் "எருது ஏறும் பெருமானை" என்றும் கூறுவதாலும் அறியலாம்.

4. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் மால்விடை ஏறி என்கிறார். ஆனந்தமால் ஏத்தும் அத்தன் என்றும், மழவெள்ளை விடையானே என்று புலம்பலிலும், ஏருடை ஈசன் இப்புவனியை உய்ய கூறுடை மங்கையும் தானும் வந்தருளி என்று கீரத்தித்திருஅகவலிலும் கூறுவார்.

விருஷபவாகனம் (எருது ஊர்தி)

சிவாலயதிருவிழாவில் "விருஷபவாகனசேவை" மிகச் சிறப்புடையது. இறைவனை "அடல் ஏறு உகந்தவன்" என்றும், "விடை உகந்து ஏறிய வித்தகர்" என்றும், "எருதேரும் எங்கள் பரமன்" என்றும், நாயன்மார்களால் பெரிதும் துதிக்கப்படுகின்ற கண்கண்டகாட்சி விடைஏறியகாட்சி. அருள்பெற்ற ஆன்மா விருஷபமாகும். அதன்வெள்ளை நிறம் அதனிடத்து எவ்விதமாசும் இல்லைஎன்பதை உணர்த்தும். தர்மம் என்ற அறத்தையே தனக்கு வடிவமாக, நான்கு கால்களாகக் கொண்டுள்ளது. மாசற்ற அறவடிவமான, வேதநெறியில் வாழும் ஆன்மாக்களிடத்து இறைவன் வந்து அமர்வான் என்பதை "விருஷபாரூட தரிசனம்" குறிக்கும். இது திருவிழாவில் ஐந்தொழில்களுள் அனுக்ரகக்கோலத்தைக்குறிக்கும் அருட்சேவையாகும்.

வ்ருஷப வாகன வடிவம்

வ்ருஷப வாகன வடிவமைப்பானது முறையே, இடபம் தலையை சற்றே முன்புறம் திருப்பியநிலையில், கால்களை இலாவகமாக முன்பின் நளினமிட்டு ஊன்றிய தோற்றத்துடன், வாலினைச் சற்றே உணர்வுடன் எடுத்தபாங்கில் அழகிட்டுத் தொங்கும் குஞ்சத் திரள்களுடன் அமைத்தல்முறை.

வீதியுலாவில் இடம்பெறும் “பெயர்ப்பு வாகனங்கள்” எடைகுறைவாக இருக்குமென்பதால் மரத்தாலான வாகனங்களாகவே ஏற்கப்படுகின்ற. பலகோயில்களில், பெரிய அளவிலான இடபவாகனங்கள் உள்ளன. இதில் வெள்ளித்தகடுபோர்த்திய ஒப்பனை மிக்க வெள்ளிரிஷபங்களும் உள்ளன. சிவனார் வீதிஉலாவருவதற்கு ரிஷபவாகனமே சிறப்புவாய்ந்ததாகும். இடபவாகனம் தன்மேல் எழுந்தருளும் தெய்வத்திற்கு வலதுபுறம் தலைஉள்ளபாங்கிலே அமைக்கப்பெற்றுள்ளது. இடபத்தின் தலை சற்று முன்புறம் இலாவகமாகத் திரும்பியதோற்றமாகவே அமைத்து வழிபடப்படுகிறது. எல்லா இடபவாகனங்களும் எப்போதும் கயிலைமலைபோல் தூய வெண்மைநிறம் பெற்றதாகவே வண்ணம் தீட்டப்படுவது முறை. இதுவலதுகாலை முன் எடுத்து வைப்பதாகவும், நடந்துசெல்வதாகவும் அழகுற அமைக்கப்படும். இதன் கழுத்தில் சிறந்தமலர்மாலை, ருத்ராக்ஷமாலை, புரசம்பூமாலை, மணிமாலை இவற்றை அணிந்துள்ளதாயும், முதுகின் மேல்விரித்த சிவனின் புலித்தோலின் விரிப்பையும், கால்களில் தண்டை முதலிய அணிகளுடனும் கூடியதாக விருஷபதேவரை அமைத்தல் வேண்டும்.

விருஷப வாகனாரூடர் துதி

பாச மான களைவார் பரிவார்க்கு அமுதம் அனையார்
ஆசை தீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவர் எம் பெருமா னடிகளே

(ஞானசம்பந்தர் தேவாரம்)

பொடி கொள் உருவர் புலியின் அதளர் புரிநூல் திகழ்மார்பில்
கடி கொள் கொன்றை கலந்த நீற்றர் கரைசேர் கண்டத்தர்.
இடிய குரலால் இரியும் அடங்கல் தொடங்கும் முனைச்சாரல்
கடிய விடைமேல் கொடியொன்றுடையார் கயிலை மலையாரே

(ஞானசம்பந்தர் தேவாரம்

விடைமேல் உமாமகேசர்



வெள்ளி விருஷப வாஹனத்தில் சிவானாரும் பார்வதியும் உலாவருதல்.

சிவன் வாஹன வீதிஉலா அட்டவணை

1. ஆகமம் : உத்ரகாமிகம்

விழா தினம்	பகல் வாஹனம்	இரவு வாஹனம்
1-ம் நாள்	ரங்கம்	ஹம்சம்
2-ம் நாள்	சூரிய பிரபை	சந்திர பிரபை
3-ம் நாள்	பூதம்	சிம்மம்
4-ம் நாள்	நாகம்	விருஷபம்
5-ம் நாள்	ஆதிகார நந்தி	தசசிரசு-இராவணன்
6-ம் நாள்	பல்லக்கு	யானை
7-ம் நாள்	பிட்சாட்னர் உற்சவம்	குதிரை
8-ம் நாள்	தேர்	கேடகம் - விமானம்
9-ம் நாள்	பல்லக்கு	கற்பகவிருட்சமரம்
10-ம் நாள்	சிம்ஹாஸனம்	இந்திர விமானம்



அண்ணாமலை யார்-உண்ணாமுலையம்மன்

திருவண்ணாமலை கோயில் மரபுமுறை சிவனுக்கு வாஹனம்

விழா தினம்	பகல் வாஹனம்	இரவு வாஹனம்
1-ம் நாள்	கண்ணாடிகோயில் (முகுரவிமானம்)	அதிகாரநந்தி
2-ம் நாள்	சூரியபிறை	இந்திரவிமானம்
3-ம் நாள்	பூதவாஹனம்	சிம்ம வாஹனம்
4-ம் நாள்	நாக வாஹனம்	கற்பவ்ருக்ஷம்
5-ம் நாள்	விருஷப வாஹனம் (கண்ணாடி ரிஷபம்)	விருஷபவாஹனம் (வெள்ளி ரிஷபம்)
6-ம் நாள்	யானை வாஹனம்	வெள்ளிரதம் (விமானம்)
7-ம் நாள்	ரதம் (தேர்)	ஆஸ்தான மண்டபம்
8-ம் நாள்	குதிரை (வேட்டை)	குதிரை
12. அக்னிதேவனுக்கு ஆட்டுவாகனம், சந்திரனுக்கு மான்வாகனம், தனிச்சிறப்பு வாகனங்கள். தெய்வங்களின் உருவஇலக்கணத்திலும், மந்திரவகையிலும் அதற்கு உரிய வாகனத்தை அறியலாம்.

வாகன அமைப்பு முறைகள்

தேர்பவனி [ரதோத்ஸவம்]

திருவிழாவில் 7ம் நாள் அல்லது 9ம்நாள் தேரூர்ந்து வருதல் மரபு. மஹோத்ஸவத்தில் ரதாரோஹணம் எனும் தேரேறிவருதல் சிறப்பு சேவை அளிப்பதாகும். இத்தேர் உரியசிறந்தமரத்தால் பலமுறையில் பலவடிவங்களில் அமைக்கப்படுவது வழக்கம். இது சிறுதேர், பெருந்தேர் என ரதம் ஸ்யந்தனம் என இருவகைப்படும். இவ்வாறு தேரூர்ந்து வருதல், இரதமூர்ந்துவருதல் அனைத்து தெய்வவிழாக்களுக்கும் பொதுவான ஊர்திவகையாகும். பெருந்தேரினை வடம்பிடித்துப் பல்லாயிரவர் ஈர்த்து வருவர். சிறுதேர் இரதத்தினை காளைமாடுகளை பிணித்துச் செலுத்திவருவர்.

பல்லக்கு

பெருவிழாவில் பல்லக்கில் இறைவன் வீதிஉலாவருவது குறிப்பிடத்தக்கதாகும். இது பலவகையான வடிவிலமையும், மூடுபல்லக்கு, தூக்குபல்லக்கு புஷ்பபல்லக்கு, முத்துபல்லக்கு முதலியவகையாகும். இதில் தண்டிகையில் வலம்வருதல் என்பது ஒருவகை. சிபிகை என்பது சிறுபல்லக்கு ஆகும். இந்த பல்லக்கு தண்டிகை சிபிகை ஆகியவற்றை ஆடவர் பலர் சுமந்து வருவர் தாங்கித் தூக்கிட உதவிடும் வாரைகள் என்னும் நீண்ட மலை மூங்கில் அல்லது மரவாரை அல்லது ஆகியவற்றை பக்கத்திற்கு ஒன்றாக வாகனபீடத்தில் கயிறுகொண்டு கட்டி, அசைவின்றி பிணைத்து, வாரைப்பகுதிகளில் ஆட்கள் தோள் கொடுத்து சுமந்துவரும் வாகன வீதி உலாவும் உண்டு.

பட்டரை வண்டி [சகடை வண்டி]

நான்கு அல்லது ஆறு சக்கரங்களைக்கொண்ட சமசதுரம் அல்லது நீள்சதுரவடிவில் சமமான மரப்பலகையுள்ள தளப்பட்டரை வண்டிகளின்மேல், தெய்வங்களை இருத்தி கட்டப்பட்ட வாகனங்களாகவும், வாரைகள் பீடங்களுடன் வைத்து காளைகளைப் பூட்டி செலுத்துவதற்கமைந்த நுகத்தடியைக் கொண்டுள்ள பட்டரைகளாக பெரும்பான்மையாக அமையும் சிறிய அளவு பட்டரைகளாயின் ஆட்களைக் கொண்டே மக்களே தள்ளும் முறையில் செலுத்தப்பெறுவதாகவும் அமையும். மற்றும் மாட்டு வண்டிபோல் இழுக்கப்படுவதாயும், கனமானமரப்பலகையைத் தளமாக சமதரையைப்போல் மேல்மட்டத்தில் கொண்டதாயும், பலசக்கரங்கள் உள்ளதாலும் இதனை சகடை என்றும் அழைப்பதுண்டு. சகடம் எனில் வண்டி என்பது பொருளாகும். இது சக்கரப் பட்டரைவண்டி எனப்படும். இதில் மரத்தினாலோ இரும்பினாலோ சக்கரம் அமையும்.



வாகனபீடம்

வாகனங்கள் என்னும் தெய்வ ஊர்திகளாக அமைக்கப்பட்ட உருவங்கள் பொருந்திநிற்பதாகவும், வாகனங்களை தூக்கவும் சுமக்கவும் ஏற்புடையதாகவும் அமைக்கப்படும் வலிமைமிக்க பலகைக் கோப்பினையே வாகனபீடம் என்பர். இப்பீடம் பெரும்பான்மையும் நான்கு பருத்தகால் களையும் மேலே சமமான கனம் மிக்கதான மரப்பலகைகளின் பரப்பினை உடையதாகவும் நன்கு பொருத்தப்பட்டிருக்கும். வாகனபீடம் பெரும்பாலும் வலிமை மிகுந்த இலுப்பைமரத்தினாலும். பூவரசு மரத்தினாலும் கருங்காலி, தேக்கு, சந்தனம் முதலிய ஸாரம்மிகுந்த மரவகையில் செய்யப்பெறும். சிலவாகனபீடங்களில் கால்களைச்சார்ந்து, உட்பறமாக இரும்புவளையங்கள் நான்கினை வாரைகளின் சுற்றளவுக்கேற்ற வடிவில்செய்து பீடப்பலகைகளில் பொருத்தி இருப்பார். வானபீடஅளவு வாகனங்களின் கூடியநீளத்தினையே சிறப்பாகக் கொண்டஅளவில், அதற்கமைந்த அகலஅளவுடன் அமைக்கப்பெறும். இதனை தச்சுத்தொழில் கலைஞர்கள் மிகச்சிறந்த தொழில்நுட்பங்களுடன் வடிவமைத்துத் தருவர்.

வாஹனங்கள் ஆக்கும்வகைமுறை

(இதனை ஏழுவகையில் காணலாம்)

வாஹனங்கள் பொதுவாக வலிமையும் நயப்பும் பொருந்திய மரவகைகளால் தச்சுத்தொழிலின் கலைத்துறையினரால் உருவாக்கப் பெறுதல் பொதுச்சிறப்பாகும். இத்தகைய தெய்வீகஊர்திகளை அமைத்துத் தரும் மரத்தச்சர்களை வேதாகமங்கள் இறைவன் வடிவினராக போற்றுகின்றன. எடுத்துக்காட்டாக "நமஸ் தக்ஷத்ப்யோ" என்றும், "நமக் கர்மாரேப்யோ" என்றும் "ரதகாரேப்யஸ்ச வோ நமோ" என்று ஸ்ரீருத்ரம் வேதம் போற்றுகிறது. அத்தகைய சிறப்புமிக்க தெய்வத் திருப்பணிகளைச் செய்வோர். சிற்பசாஸ்திர இலக்கணத் தொழில்நுட்பங்களால் விதிமுறை வழுவாது. ஆலயவிழாக்களின் தளவாடப்பொருட்கள். பலவகையான ஊர்திகள். வாஹனங்கள். எடுப்புமண்டபவகைகள். விமானவகைகள். தேர்வகைகள் இவற்றை உரிய மரவகையில் நூல்விதிமுறைப்படி செய்தளித்திடுவது தொன்மைமரபாம்.

வாகனத்தின் மூலப்பொருள்கள்

வாகனங்கள் பொதுவாக பயன்பாட்டுவகை, உருவஅமைப்புவகை இவைக்கேற்ப அசைக்கும்நிலை, அசைக்காதநிலை என இருவகையாக மூலப்பொருளை ஏற்பது நடைமுறை. ஆகமங்கள், கல், உலோகம், மரம் என்பவற்றைக் கூறுகின்றன.

கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்

மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்

கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை

பத்தே சிற்பத் தொழிற் குறுப்பாவன

என்று தமிழ்அகராதியான திவாகரநிகண்டு தெரிவிக்கிறது. காமிகாகமம் ஆறுவகைகளின் பிம்பநிர்மாணத்திற்கு பொருட்களைக் கூறுகிறது. இவ்வாறு வாகன அமைப்பு பலவகையில் கூறப்பட்டிருப்பினும், வழக்கத்தில் பாலுள்ள மரவகைகளில் உலர்ந்தமரத்தில்செய்து, துணியைஒட்டி வண்ணம்பூசுதலே அதிகமாக வழக்கில் உள்ளமுறையாகும். சுமைகுறைவாக இருக்கும் என்பதாலும், வேள்விக்குரியமரமாக உள்ளதாலும், உலர்ந்தமரமானது நயமானவேலைக்கு எளிதாக உதவும் என்பதாலும், அத்திமரத்தாலேயே பலரும் வாகனங்களைச் செய்திடுவர். மேலும் வலிமையான பூவரசுமரம், பலாமரம் முதலிய மரங்களைக் கொள்வதுமுண்டு.



வாகன தயாரிப்புமுறைகள்

இவ்வாறு வடிவமைத்த மரவாகனத்திலேயே உலோகத் தகட்டால் மரவேலைப்பாட்டின்மேல் உருவவெளிப்பாட்டு நகாசுவேலைப் பாட்டுடன் வாகனத்தை அமைத்திடுவர். பொன், வெள்ளி ஆகிய மதிப்புமிக்க உலோகத்தல் உருவம் முழுவதையும் ஆக்கப்பெறுதல் எளிமையுடையதாகாமையாலும் அதனால் உயர்மதிப்பு உலோகம் அளவுக்கு மேல் தேவைப்படும் வீண்செலவு உண்டாதலாலும், தோற்றப்பார்வைக்கு வெள்ளி, தங்க வாகனங்களாக உருவவெளிப்பாடுஉறும் தொழில் முறை யிலேயே தங்கமயில், தங்ககுதிரை, வெள்ளிரிஷபம், வெள்ளியானை, ஆகியவாகனங்கள் செய்யப்பெற்றுள்ளன. வெள்ளியில் பொன்பதிப்பில் இரத்தினங்கள் வண்ணக்கற்கள், இவற்றின் பதிப்பையும் செய்திடுவர். இத்தகைய கலைத்தொழில்கொண்ட வாகனங்களை “பொன்வெள்ளித் தகட்டுரு வாகனங்கள்” எனலாம்.

உலோகவாகனம்

பெரியகோயில்களில் இவ்வகைவாகனங்களைக் காணலாம். செம்பு, பித்தளை, வெண்கலம் ஆகிய உலோகங்களில் ஏதேனும் ஒன்றால் வார்ப்புமுறையில் சிலைபோன்றே நின்றநிலை அல்லது படுத்த நிலைகளில் விருஷபம், சிம்மம், முதலிய வாகனங்களை அமைப்பதும் ஒருமுறையாகும். இதனை இறைவன் சந்நிதியில் அருகில் உலோகத்தாலான வகனங்களைப் பெருங்கோயிலில் முன்மண்டபத்தில் காணலாம். இவ்வகையில் அதிகசுமை ஏற்படுமாதலால் அசைத்திடும் அல்லது சுமந்திடும் வாகனங்களை வார்ப்புமுறையை விடுத்து, மரத்தில் தகடுபோர்த்தி செய்திடுவதே மரபில் உள்ளது.



சுதாவாஹனம்

செங்கல், சுண்ணாம்புக்கலவை ஆகியவற்றால் உருவாக்கப் பெறுபவை சுதைவாகனங்களாகும். இவ்வாகனங்களின் அமைப்பிற்கு உள்ளீடாகச் செங்கற்களைச் சுண்ணச்சாந்தால் இருத்தி வடிவுக்குக் கருவான ஆசிட்டு, அதன்மேல் அங்கஅமைப்புக்களையும், அணிஒப்பனைகளையும், நன்கு அரைக்கப்பட்ட சுண்ணாம்புக்கலவைச் சாந்தினால் கொத்துக்கலைஞர்கள் உருவாக்குவர். இவ்வாறு அமைக்கப்பெறும் வாகனஉருவங்கள் நிலைப்பாக ஓரிடத்திலேயே அமைக்கப்பெற்று விளங்குதலேயன்றி, வீதி உலாவிற்கோ, பிறவாறோ இடம்பெயர்த்து எடுத்துச்செல்வதற்குரியது ஆகாமையினால் இவற்றை சுதைவாகனங்கள் எனலாம். இவ்வகையினை கோயில் வெளிச்சுற்றில் எதிரில் பெரியஅளவிலும், சுற்றுமதில்களின் மேலேயும் மூலைகளிலும், விமானங்கள் கோபுரங்களில் விருஷபதலம் எனும் பிரஸ்தரவர்கத்தின் மேலேயும் அமைந்துள்ளதைக் காணலாம்.

சிலாவாஹனம்

கருங்கல்லில் உருவாக்கப்பெறும் சிற்பவாகனங்கள் ஒரேகல்லில் சிற்பி தேவையான வானத்தினை உளித்திறனால் உருவாக்குவார். கல்லாதலால் இது கனம்மிகுந்ததானதால் உலாவிற்கு ஏற்புடையதன்று. கல்வாகனச்சான்றுஎன, கும்பகோணம்நகரத்திற்கு தென்கிழக்கேயுள்ள நாச்சியார்கோயிலில் உள்ள கல்கருடவாகனத்தினைக் கூறலாம். இங்கு ஆண்டிற்கு ஒருநாள் இதன்மீது பெருமாள்திருமேனி எழுந்தருளி ஆட்கள் சுமக்க வீதியுலாவருவது, இன்றும் நிகழ்ந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய வாகனங்கள் கல்வாகனம் அல்லது சிலாவாஹனம் எனலாகும்.

மண்சிற்ப வாஹனம்

குயவர்கள் மண்ணால் வனைந்து கிராமத்து ஐயனார்கோயில்களில் யானை மற்றும் குதிரை அணியாகக் கோயிலின்முன் திருமுற்றத்தில் அமைந்த இடத்திலேயே இருப்பவையாக அமைத்திடுவர். இதனை பலர் நேர்த்திக்கடனாக நிறுவுவர்.

வாகனமரங்களின் இயல்பும் தேர்வும்

வாகனங்கள் செய்வதற்கு உரியதாகத் தேர்ந்தெடுக்கும் மரங்கள் வலிமை பொருந்தியதாகவும், உட்செறிவு உடையதாகவும் (அதாவது அந்தஸ்ஸாரவிருக்ஷமானதும்) வெப்பத்தால் வெடிப்புறுதலைப் பெறாத நயப்புடையதாயும், உளியால் செதுக்குவதற்கு உரியவேலைக்கு நார், பிசிர் தட்டாத நடமுடையதாயும் இருத்தல்வேண்டும்.

மரம் வலிமையுடையதாக இருக்கவேண்டுமே தவிர, கடுமை அதாவது இறுக்கம் உடையதாக இருத்தலாகாது. உளியால் சீவியும் செதிலிட்டும் எடுத்து, உருவத்தை உருவாக்கும் போது, பிளத்தல், தெறித்தல், முறிதல் ஆகிய குற்றங்கள் இல்லாத, ஏற்படுத்தாத மரவகையாகவும் அமைதல் வேண்டும்.

வாகனத்திற்கு ஏற்கத்தக்க மரவகை

இத்தகையதாக தச்சுக்கலைஞர்கள் தேர்வுசெய்துள்ள மரச்சிற்ப வேலைப்பாட்டிற்குரிய மரங்கள் ஐந்தாகும். அவை 1. இலுப்பை. 2.தோதகத்தி 3.செம்மாறை 4.இருளி 5. ஆல் என்பனவாகும். இவ் ஐந்துவகை மரங்களும் மரச்சிற்பவேலைக்கு நயமும் பசைப்பும் பொருத்தினவாகும். இவற்றுடன் நுட்பப்பகுதிகளை வேலைப்பாட்டுடன் அமைத்தற்குரியதாக இரண்டாந்தரமுடையதாக நுனா, பூவரசு ஆகிய இரண்டு வகை மரங்களும் கையாளப்பெற்றுள்ளன. முற்காலத்தில் மேலே குறித்தமரங்களில் ஒன்றினைக் கொண்டே வாகனங்களைச் செய்துள்ளனர். பிற்காலத்தில் முதிர்ந்த ஆலமரத்தினாலேயே வாகனங்களை உருவாக்கியுள்ளனர். இவைகளேயன்றி சிறப்பாகச் சந்தனமரமும், வெண்கடம்புமரமும் வாகனங்களை உருவாக்குவதற்கு அருமையாகப் பயன்படுத்தியுள்ளனர். இம்முறை இக்காலத்திலும் தச்சுக்கலைஞர் வாகனம் செய்யும்போது கையாளப்பெற்று வருகின்றது.

வாகனம் செய்வதற்கு சிறந்த மரங்கள் கிடைப்பது அருமையாயின காலத்தில் நுணாமரம், பலாமரம், பூவரசுமரம் இவைகளில் போரை,

கணு, பிளவு, மடிசல் ஆகிய குற்றங்கள் இல்லாதபகுதிகளாகத் தேர்வுசெய்து, வாளால் துண்டுசெய்து, துண்டித்த மரங்களைக் குளம், குட்டை, ஆகியவற்றில் நீரினுள் சேற்றில் அழுந்திய நிலையில், அம்மரங்களை அழுத்திவைப்பர். ஆறுமாதங்கள் அவ்வாறு நீரில் ஊறியமரங்கள் உளுத்தல், போரைஓடுதல், மடிதல் வெடித்தல் போன்ற நிலைகளை அடையாமல், உளியால் உருவாக்கும் வேலைக்கும் நயம் பொருந்தியதாக அமையும். எனவே இவ்வாறு ஊறவிட்டபின்னரே தச்சுகலைஞர்கள் வாகனங்களை இம்மரங்களில் விதிஇலக்கண அளவுமுறைப்படி உருவாக்குவார்கள். முதன்மையாக குறித்த தேக்கு, இலுப்பை போன்றமரங்கள் நெய்ச்செறிவு (தைலபாகம்) இயல்பாக அமைந்த மரங்களாகும். இம்மரங்கள் மிகுதியாக உலர்தல், வெட்டியபின் பல ஆண்டுகளாதல் ஆகிய குற்றங்களற்ற நிலையில் தேவைக்கேற்ப உடனடியாகத் தச்சுக்கலைக்குரியதாக அமைந்திருக்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நீக்கத்தக்கமரக்குற்றங்கள்

வாகனங்கள் செய்வதற்குத் தேர்ந்தமரங்களில் குற்றங்கள் இருத்தல் என்பது உருவாக்கும் தொழிலுக்கும் தெய்வ வாகனநியதிக்கும் பொருந்தாதது ஆகும். மரங்களில் இயல்பாகவும் சிலகாரணமாகவும் அமைந்த குற்றங்களைப்பற்றி தச்சர்களும், மரவேலைச் சிற்பியரும், பலவகையில் கூறுதலை ஒருசேரத் தொகுத்துரைத்தல் சிறந்ததாகும். அதன்படிதேர்வு செய்தமரத்தில் பொறிவு, முறிவு, கணு, மூட்டு. வெடிப்பு, பிளப்பு போரை. உலுத்தல், மடிசல், வைரக்கடுமை, கரியோட்டம் ஆகிய குற்றங்கள் இருத்தலை ஆராய்ந்து இக்குற்றங்கள் இல்லாத பகுதிகளை மட்டுமாக அறுத்தெடுத்தல் வேண்டும். இவ்வாறு மரதிம்மைகளை சேமித்திடவேண்டும். இச்செயலை “தருஸங்க்ரஹம்” என்று நமது நூல்கள் குறிப்பிடுகின்றன.

மரத்திற்கமைந்த இயல்நலங்கள்

கழிப்பில்லாத ரேகை, கசங்கல்இல்லாத நிறம், கணுவில்லாத துண்டுப்பகுதி, உள்கருவில் கரியோட்டம் இல்லாத செந்நிறம், நெய்நயம் கூடிய பசைப்பு ஆகிய குணநலன்களே தேர்ந்த மரங்களுக்குஅமைந்த இயல் நலங்களாகும். வாகனஅமைப்புக்கு உதவும்பொருட்களாக வாகனஉருவ உறுப்புகளின்மூலவடிவிற்கமைந்ததும் தேர்ந்து எடுத்துக் கொள்ளப்பெற்றதுமாகிய மரத்துண்டங்களும், அவற்றில் அறுத்து எடுக்கப்பட்ட பலகைகளுமே முதன்மைபெறுவனவாகும். மேலும், செப்பாணிகள் இரும்புச்சட்டங்கள். மக்கு எனும் பசை. வெண்சீலை, அரக்கு, முத்துச்சுண்ணக்கலவை ஆகியபொருட்களும், மேற்பூச்சுக்குரிய வண்ணவகைகளும் முழுமையானதாக்க உதவும் பொருளாகும்.

வாகனஅடிப்படை அமைப்புவகை

முறையே செய்யப்பெறும் வாகனஅமைப்பு முறையில் இருவகையினைக் காணமுடிகின்றது. முதலாவது, அசைவில்லாத அங்கங்களுடன் ஒரே திண்மையாகச் செய்யப்பட்டவடிவங்கள். இரண்டாவது, தலை, வால், காதுகள், போன்ற அங்கங்கள் அசையும்படியான வேலைப்பாட்டுடன் அமைக்கப்படும் வடிவங்கள்.

அசைவில்லாத உறுப்புடையனவற்றைப் பொது என்றும், அசையும் அங்கங்களுடையனவற்றை சிறப்பு என்றும் கூறுலாம். எத்தகைய வாகனங்களையும் அசையாத அங்கங்களுடனும் திண்மையுடனும் செய்தமைத்தல் பெரும்பான்மையும் பின்பற்றப்பட்டு உள்ளமையினைக் காணமுடிகின்றது.

அசையும் (தலை, துதிக்கை, முதலிய) அங்கங்களுடன் அமைந்த வாகனங்களாக ஒருசில கோயில்களிலேயே செய்தமைத்துள்ளனர். இதனை ஆகமங்கள் “யந்திரம்” என்று குறிப்பிடுகின்றன. அத்தகைய

இயங்கும் வாகனங்கள் யானை, குதிரை (சிங்கம்) ஆகியவைகளாகவே அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். வாகனங்களை கலைஞர் ஆக்கும்போது இரண்டுவகை முறைகளில் செயற்பட்டுள்ளனர் என்பது வாகனஅமைப்பால் அறிய முடிகிறது.

இருவகைத் தோற்றத்தில் வாகனங்கள்

இயல்பானமுறை

1.இயல்பானமுறையில் சிலவாகனங்கள் அமைப்புடையதாகும். அதாவது மூஞ்சுறு, சனைச்சரதேவரின் காக்கை இவை நேர்முகத்தோற்றத்தில் அமைக்கப்படும். இது உள்ளது உள்ளவாரே தோன்றும் இயல்பு முறையில் தோன்றுகிறதே யொழிய நுட்பங்களுடன் தோன்றுதலில்லை.

கலைநயமுறை

2. கலைமுறையில் பெரும்பான்மையான வாகனங்கள் அமைவன ஆகும். கலைமுறையவடிவாக்கத்தில் வாகனத்தில் தலை, கால்களின் அமைப்பு வால் அல்லது தோகை அல்லது இறக்கை இவ்வங்கங்கள் திட்டமாக இடம்பெறும் உறுப்புகளாகும். மயில்கொண்டை, இறகுகள், தோகை ஆகியவற்றையும், அன்னப்பறவையின் கொண்டை இறகுகள், கழுத்து, தோகை ஆகியவற்றையும், கற்பனைத்திறம்பெற்ற ஒப்பனைகளாகக்காட்டி, அழகுபடுத்தியுள்ளது கலைமுறையாகும். பாயும் குதிரையில் பின்னங்கால்களை ஊன்றியநிலையில் முன்னங்கால்கள் இரண்டினையும் மேலே எடுத்துத்தாவும், பாங்கில் உணர்வுடன் காதுகளை விரைப்பாக்கி வாயினை மூச்சுஇரைக்கச் சிறிதுதிறந்து, செல்லுகின்ற தோற்றமாகவும், உயிரோட்டம் பெற்றதாக கலைமுறையில் செய்வதைக் காணலாம். மரசிற்ப தச்சுக்கலையின் உச்சநிலை சிறப்பாகும்.





வாகன தச்சுக்கலைமுறை [நால்வகையில்]

வாகனங்கள் நால்வகைப் பாகுபாட்டுடன் விளங்குகின்றன. அவை 1.விலங்குவகைஉருவங்கள். 2.பறவைவகைஉருவங்கள். 3.மனிததெய்வத் திருவுடல்வடிவங்கள். 4.மனிதவிலங்கு கலப்புவடிவம் மேலும் மலை, மரம் சூழ்நிலைகலந்தஅமைப்புகள். நந்தி, கருடன் புருஷாமிருகம், காமதேனு, ராவணன்கயிலைமலை, பூதம், கற்பகவிருக்ஷம், முதலியவற்றையும் உற்றுநோக்கி உணரலாம்.

வாகனங்களை, அதன் அங்கப்பிரிவுகளைத் தனித்தனியே முப்பெரும் பிரிவாகத் தயார்செய்து, பின்னா் முறையே வலுவுற செப்பாணிகளால் அல்லது மரஆணிஆப்புகளால் ஒன்றாக இணைத்து முழுஉருவாக்குவது தச்சுக்கலையின் மரபுமுறை. அங்கங்களை இணைக்கும் அங்கக்கோப்புமுறை, தலை, வயிறு கால் இவற்றை கலைவடிவத்துடன் சுமையைத் தாங்கும் வகையில் தாங்கல்வகைகளை பல உருவங்களில் அமைக்கும் முறையும் தனிச்சிறப்பாகும்.

வாகன வண்ண ஒப்பனை [வண்ணம்தீட்டல்]

வாகனத்தை மரத்தால் உருவாக்கிய பின்னரே, அதற்கு வண்ணமிட்டுத் துலங்கச்செய்வர். மரத்தில் சிற்பத்தொழிலால் காட்டப்பட்ட அங்கநுட்பங்களை உள்ளவாறு தெளிவாக அமைத்துக்காட்டுவதற்கு வண்ணஒப்பனைகள் சிறப்பாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக இடபத்தின் கண்புருவம் மரத்தில் செதுக்கப்படுதல் இயலும். ஆனால் கண்புருவத்து மயிர்கள் வண்ணத்தீட்டலாலேயே காட்டமுடியும். இவ்வாறமைந்த தொழில்நுட்பத் திறனால் வாகனங்கட்கு வண்ணஒப்பனையே உயிர்ப்புத் தோற்றத்தினையும் கவர்ச்சியினையும்

அமைத்துக்காட்டியுள்ளது. வாகனங்களுக்கு இயற்கையில்உள்ள நிறத்தாலேயே ஒப்பனையைச் செய்வர். பொன்ரேக்கு ஒப்பனைமூலம் ஆடையின் ஜரிகை, பொன்அணிகலன்களை தங்கரேக்கு என்னும் மெல்லியதகடுகளைப், பற்றாசிட்டு பொருத்துவதும் வண்ணஒப்பனைக் கலையுடன் கூடியதேயாகும்.

கண்ணாடிபதிப்பு ஒப்பனைமுறை

வாகனங்களில் தலையில் கட்டியாகவும் கழுத்தில் அணிகலன்களாகவும், இரசமிட்ட கண்ணாடியினைத் தேவையான அளவில் துண்டுகளாக ஆக்கிக்கொண்டு, கொண்டு அதனை அரக்கினாலும் மக்கு என்னும் மரப்பசையினாலும் முறையே ஒட்டச்செய்து, அதன்ஓரங்களை தங்கத்தாள் அல்லது தங்கரேக்குத்தகடு ஆகியவற்றை வச்சிரப் பசையுடன்கூடிய மக்கினால் பதிப்பித்து, அழகான அணிகலன்களை ஆக்கிக்காட்டியுள்ள கண்ணாடிப் பதிப்பு ஒப்பனையோடு கூடிய வாகனங்கள் பெரும் மதிப்புடன் விளங்குகின்றன. தஞ்சைநகர் சுற்றியகோவில்களில் வாகனங்களில் இவ்வகையைக் காணலாம்.



நந்திதேவர் வாகனம் [எருதுமுகத்தேவர்]

நந்திதேவர் வாகனப் பெருமை

சிவனுக்கு உரிய வாகனவகையுள் "நந்திவாகனம்" மிகவும் சிறப்புடையது. விருஷபதேவர் சிவதருமநெறியில் தவமிருந்து கோடிகோடிமுறை ருத்ரம் ஜபித்து சிவபதமுக்திபேறு பெற்று, சிவகணங்களில் முதன்மையானவரானவர். இவர் சிவனதுஉருவத்தையே ஸாரூப்யபதவியாக அடைந்த பெருந்தவசீலர். இவரை நான்குகைகளுடன் தேவர்உருவில், சிவனார் வேடத்தில், மான் மழு இரண்டை ஏந்தியவராய், முன் இருகைகளைக் கூப்பி அஞ்ஜலி செய்பவராவார். சிவலோகத்தில் எவரும்" உட்புக அனுமதிஅளிக்கும் சிறப்பு அதிகாரத்தை வரமாகப்பெற்ற சிவபக்தர். இவரை சிவனுருவில் தேவனாக அமைந்ததால் "அதிகார நந்தீ" என்பார்கள். இவருக்கு இருபக்கத்திலும் பாட்டிசைக்கும் கந்தர்வன், கந்தர்வி, இருவருடம் உடன் அமைக்கப்படுவதும் வழக்கமாகும். புராணத்து சிவஸஹஸ்ரநாமதுதியில் கூறப்பட்டுள்ள நாமாக்களால் சிவனாரின் நந்திவாகனப் பெருமை உணரத்தக்கது. 375ல் நந்திகர; 377ல் நந்தீச்வரர், 378 நந்தீ, 380ல் நந்திவர்தனர், 520ல் நந்திவாஹனர் என்ற பெர்களால் போற்றப்பட்டுள்ளார். மகிழ்ச்சியைத் தருபவரே நந்திதேவர்.

நந்திதேவர் வாகன வடிவம்

நந்தி வாகனமானவர் சிவபெருமானைத் தாங்கி மகிழும் சிவகணத்தவர் காளைமாட்டின் முகத்தினையும், தேவமனித உடலையும்

கொண்டிருக்கும் துணைத்தெய்வம். சிவனுக்குரிய தலைமைச் சேவகரும். மெய்க்காவலருமாவார். சிவன்கோயிலில் கருவறைக்கு முன்பாக முகப்பு மண்டபத்தில் நின்றநிலையிலோ, படுத்தநிலை யிலோ இடம்பெற்று காளைக்கன்றின் வடிவத்தில் இருப்பவர். ஆலயவெளிப்புறத்தே இவ்வடிவினை இடம்பெறச் செய்வதுண்டு. சுற்றுப்பிராகார மதில்சுவர் மூலைகளிலும் நந்திவாகனத்தை அமைத்து தேவராக வழிபடுவர். இத்தகைய மனிதவிலங்கு கலப்பின உருவவழிபாடு மிகத்தொன்மையானதாகும். இத்தகைய வாகனங்கள் அழகு, வியப்பு, மயக்கம் ஆகிய மூன்றுவகைப்பயன் தருபவையாக கவர்ச் சிமிக்கதாய் விளங்குவன ஆகும். சிவஉற்சவத்தில் நந்திதேவர்தரிசனம் சிறப்புடையதாம்.

நந்திகேசர் வாகனம்

சிவாலயப் பெருவிழாவில் சிவனுருவப் பேறுபெற்ற அதிகாரநந்தி வாகன தரிசனம் மிகவும் சிறப்புடையதாம். அதிகாரநந்தி நாற்கரங்களும், மான் மழு இரண்டையும் ஏந்தி, இருகைகூப்பி, மூன்று கண்களும் ஈசனின்மற்றய குறிகளோடும் சாரூப்பிய பதமுக்திபெற்ற விக்ஞானகலர் ஆகிறார். மூலகை ஆன்மாக்களுள் சிறந்தவராகி கயிலையில் சிவசந்நிதானத்தில் அறக்கோல் ஏந்தி, அடியாரைதரிசிக்க அனுமதிக்கும் அதிகாரம் செலுத்துபவர். ஆதலால் அதிகார நந்தீ எனபோற்றப் படுபவர். இச்சேவை தொண்டர்க்கு இறைவன் எளியவன் என்பதையும் சிவயோகநெறியில் இறை நிலையை எய்துதலையும் குறிப்பதாகும். இது சிவயோக சங்காரகிருத்தியலயத்தை உணர்த்தும் கோலமாகும்.

நந்திதேவர் துதி

வந்து இறை அடியில் தாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அலகு இடும் குப்பை ஆக்கும்
நந்தி யெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்.

(பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்)

காமதேனு (தெய்வீகப்பசு)

காமதேனு வாகனப்பெருமை

பாற்கடலிலிருந்து வெளிப்பட்டு தேவலோகத்தில் வசித்திடும் தெய்வீகப் பசுவிற்கு "காமதேனு" என்று பெயர். இப்பசுவினை தேவர்கள், தேவதேவிகள் முனிவர்கள் போற்றிப்புகழ்ந்து, விரும்பியதைப் பெற்றதைப் பலபுராணங்கள் விளக்கிக்கூறும். இப்பசுவும், இப்பசுவின் குலத்திலுதித்த பல பசுக்களும், இம்மண்ணுலகில் பல தலங்களில் இறைவனை வழிபட்டு அருள் பெற்றன என்பது வரலாறு. அற்புத வடிவிலமைந்த தெய்வப்பசுவாகனம் சைவ மற்றும் வைணவ கோயிலின் பெண்தெய்வங்கள் விழாவில் ஊர்ந்து, உலாவருவதற்கமைந்த பொதுச்சிறப்பு வாகனமாகவே விளங்குகின்றது. அற்புதத் திருவுருவம் உள்ள தெய்வப்பசுவாம். "ஆவினுக்கு அருங்கலம் அரன் ஐஞ்சு ஆடுதல் என்பார் அப்பர். பால், தயிர், நெய், கோமயம், கோஜலம் ஆகிய ஐந்தை பூஜைக்கு அளித்து உதவும் உன்னதப்பேறு பெற்றது இப்பசுத்தாய் ஆகும்.

காமதேனு வாகன வடிவம்

இது பசு இனமேயாயினும் பெண்தேவதையின் வடிவத்தோடும், பறவை அம்சத்தோடும், மூவகைப் பிறப்புடன் விளங்குவதாய், பின்னிய அழகிய கூந்தல் சடையை உடைய தெய்வப் பெண்தலையுடனுள்ள பசுவின்மேனியும், (மார்பளவுவரையிலோ கழுத்துவரையிலோ உள்ளபெண்ணுருவமும்) அதிக பால்வளம் தரும் பெரியமடியுள்ள பசுவாகவும், இதன் வால்பகுதியில் பலநிறங்களுடன் பார்ப்பவரைக் கவரும் மயில்தோகையை உடையதாகவும்,

அமைத்து, அத்தெய்வப்பசுவிற்குப் பறக்கும் திறனையும் கூட்டியதாக முதுகில் இருபுறமும் இறக்கைகளையும், அழகுடன் அமைத்து, மறச்சிற்பியர் வழங்குவர். இக் காமதேனு வாகனம் சிவன்கோயில்களின் அம்பாள் (பார்வதி, மீனாக்ஷி) புறப்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. காமதேனு என்னும் பெண், பசு, மயில் ஆகிய முத்திரக் கூட்டுருவாக விளங்கும். இதில் 1.இறக்கையில்லாதது, 2.மயில்தோகை யில்லாதது, 3.கொம்பில்லாதது, 4.பின்னிய கூந்தல்சடையில்லாதது போன்ற அமைப்புகளால் இவ்வாகனம் மாறுபட்டும் விளங்கும்.

காமதேனு வாகனாருட தெய்வத்துதி (தேனுவாகினி உமை)

இழை இடை நுழையா வண்ணம் இடை இற வீங்கு கொங்கைக்
குழை இடை நடந்து மீளும் கொலைக் கணார் குழுவும் தான
மழை கவிழ் கடாத்து வெள்ளை வாரணம் மாவும் கோவும்
தழை கதிர் மணியும் தெய்வத் தருக்களும் கவர்ந்து மீண்டாள்
இரவி நீள்சுடர் எழுவதன் முன்னம் எழுந்து தன்முலைக் கலசங்கள் ஏந்தி
சுரபி பால்சொறிந்துஆட்டிநின்பாதம்தொடர்ந்த வார்த்தை திடம்படக் கேட்டு
பரவி உள்கி வண்பாசத்தை அறுத்து பரம வந்து நும்பாத்த்தை அடைந்தேன்
நிரவி நித்திலம் அத்தகு செம்பொன் அளிக்கும் தென் திருநின்றியூரானே

(திருநாவுக்கரசர் தேவாரம்)



கற்பகத்தருவாஹனம் [கற்பகமரம்]

கற்பகவிருட்ச வாகனப்பெருமை

தேவாசுரர்கள் இருதரப்பினரும் அமுதம்பெற பாற்கடலைக் கடைந்தபொழுதில், அப்பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட அதிசயம் பொருந்திய தெய்வீகப்பொருட்களில் ஒன்றான, யாவர்க்கும் விரும்பியதைத் தரவல்ல அதிசயமரமே கற்பகவிருக்ஷம் எனப்படுவது ஆகும். விருக்ஷம் என்னும் மரம், தரு, பாதபம், விடபம், முதலான பலபெயரால் குறிப்பிடப்படும். திருவிழாவில் இறைவன் கற்பகமரத்தடியில் எழுந்தருளி காட்சிதருவது உலக உயிர்களுக்கு படைத்தல்தொழிலின் பெருமையை உணர்த்தி விரும்புவதைஅளித்து மேன்மையைத் தரவல்லதாகும். இம்மரத்தின் கிளைகளும் இலைகளும் தத்துவங்களாகவும், உயிர்வர்க்கங்களாகவும், மலர்கள் சித்திகளையும், கனிகள் பலவகை முத்திகளையுதட உணர்த்துவனவாகி இம்மரம் படைப்புக்கு வேர்போல் உலகிற்கு இறைவன் பரமகாரணராய் உள்ளதைவிளக்குகிறது. வேதத்தில் சத்ருத்ரீயம் நமோவ்ருக்ஷேப்யோ என்றும், வ்ருக்ஷாணாம் பதயே நம:, என்றும் சிவனை மரங்களின் வடிவினராயும் அதிபதியாயும் போற்றுகிறது. புராண ஸஹஸ்ரநாமதுதிகளும் 540ல் தரவே நம:, வ்ருக்ஷாய நம: என்கின்றன. கல்பவ்ருக்ஷர், ஸுரத்ரும், வ்ருக்ஷாகார:, வ்ருக்ஷகேது:, ந்யக்ரோதரூபர் என்ற பல பெயர்களால் போற்றப்படுதலால் தெய்வாம்சமான வ்ருக்ஷவாஹனப் பெருமை (ஆலமரம், தென்னை மரம், பனை மரம் முதலிய) உணர்த்ததக்கதாகிறது.

இது அதிசய உருவமும் வல்லமையும் உடையது என்பதைக் குறிக்கும்வகையில் சிற்பியர் இக்கற்பகம் என்பதைக் கற்பனையுடன் கேட்டதைக் கொடுக்கும் தெய்வமரமாக நாம் காணும்வகையில் மண்ணுலகமரத்தினும் மாறுபட்ட வடிவங்களில், அழகிய மரமொன்றினை கல்லிலும் உலோகங்களிலும் பொறித்துக்காட்டினர். இந்த மரம் இந்திரலோகத்தில் உள்ள அதிசயப் போகப்பொருளாக விளங்குவது. பலதெய்வங்கள் இந்த மரத்தடியில் நின்று ஆனந்தித்து அருள்தந்துள்ளனர். எனவே அருள்தரும் விழாவில் உரியதெய்வத்திற்கு இதனை வாஹனமாகக்கொள்வர். இதனடியில் தெய்வத்தைக் கண்டுதரிசிப்போர் இவ்வுலகில் அறநெறிபிறழாமல் வாழ்ந்து, உயர்தவம் இயற்றினால் பெறுகின்ற இந்திரபோகங்களை அனுபவிப்பதற்குரிய தேவராகி வானுலகம்சென்றும் கற்பகம், காமதேனு ஆகிய தெய்வீகங்களினால் தாம்விரும்பிய பெரும்சுகத்தைப் பெறுவர் என்று ஆகமபுராணங்கள் பயனை விளக்குகின்றன. இவ்வாறாக ஈதலுக்கும் அருளுக்கும் ஒரு இலக்காக இதவ்வாகனம் உருப்பெற்று விளங்குகிறது. இந்தமரம் விநாயகர், முருகன், சிவன், பெருமாள் முதலான தெய்வங்களுக்கு ஏற்றது. தாவரஇனங்களை வேதமானது ‘நமோ விருக்ஷிக்ஷேப்யோ” என்று போற்றுவதால், மனிதனும் காற்றாய்வழிபட மரங்களை தெய்வமாகக்கண்டு வழிபடுகிறான். எனவே கோயில்தோரும் “தலவிருக்ஷம்” என்பதாக ஒருவகைமரம் போற்றப்படும். எடுத்துக்காட்டாக மாமரம், பலா, வாழை, வில்வம், வாகை, வேம்பு, ஆல், அரசு, அத்தி, வன்னி முதலிய மரங்களைக் காணலாம். தர்பை, துளசி, தும்பை, முதலிய புல்பூண்டுகளும் போற்றப்படுகின்றன. ஆயுளைவளர்க்கும் அருகம்புல், நோய்களைநீக்கும் துளசிச்செடி. வளம்பல நல்கும் அரசும் வேம்பும், தெய்வத்தாவரங்களாக விளங்குகின்றன.

கற்பகவிருட்ச வாகன வடிவம்

சிலதெய்வங்கள் சிலமரத்தடியில் இருக்கவிரும்பி, அங்கு இருந்து அருள்வதாக புராணங்கள் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக கிருஷ்ணர் புன்னைமரத்தடியிலும், சிவன் ஆலமரத்தடி சரக்கொன்றை மரத்தடியிலும், முருகன் வேங்கைமரத்தடியிலும், மாரியம்மன் வேப்பமரத்தடியிலும் சாா்ந்து இருந்து அருள் தருகின்றனர். எனவே, வில்வம் மரம், மா மரம், வாழை மரம், தென்னை

மரம் முதலிய மரங்களையும், சிலதலங்களில் கற்பகவிருட்சம் போன்று மாற்றாக இவற்றையே கற்பகவிருட்ச வாஹனமாகக் கொள்வதும் அந்தந்த தலபுராணத்தைத் தழுவி கைகொள்ளப்படுவதும் வழக்கில் உள்ளது. கருற்பகவிருட்ச வாகனமானது சிவன், விஷ்ணு, உமையவள், விநாயகர், முருகன், முதலிய பலதெய்வங்களுக்கும் பொதுவானதாக உள்ளதாகும், சிறந்த வாகனங்களுக்கு இணையாக கற்பகமரம் போற்றப்படுகிறது. இது பலகிளைகளையும், நிரம்பிய இலைகளையும், காய்கனிமலர்களையும் கொண்டதாக அழகுடன் விளங்குவதாக மரத்திலேயே இம்மரம் செதுக்கப்பட்டிருக்கும். இம்மரத்தின் முன்னே தெய்வத்திருமேனிகள் பீடத்தில் இடம்பெறும். இக்கற்பகமரமானது பல தலங்களில் 1.பூவரசு மரவடிவிலும் 2.ஈச்ச மரவடிவிலும் 3.தென்னை மர வடிவிலும் 4.வாழை மரவடிவிலும் காணப்படுகிறது. மேலும் சிறப்புமிக்க



கற்பனைவடிவுடையதாகவும் இவ்வாகனத்தை அமைத்திடுவர்.

கற்பகமரத்தடிஉறை கடவுள் துதி

உருத்திரனை உமாபதியை உலகானானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப் பதத்தை பஞ்சவடி மார்பினானைப்
பகல்இரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப் பதனை நித்திலத்தின் தொத் தொப்பானை
நீறணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனைக் கஞ்சனூர் ஆண்டகோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனெ.

(நாவுக்கரசர்தேவாரம்)

கற்பகமரத்தடி தெய்வத்துதி

தழைத் ததோர் ஆத்தியின் கீழ் தாவர மணலாற் கூப்பி
அழைத் தங்கே ஆவின் பாலை கரந்து கொண்டாட்டக் கண்டு
பிழைத் தனன் தாதை தாளைப் பெருங்கொடுமழுவால் வீசக்
குழைத் ததோர் அமுதம் ஈந்தார் குறுக்கை வீரட்டனாரே

(திருநாவுக்கரசர்திருநேரிசை)

கற்பகமரத்தடி சேவை

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டோ
அன்போடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண் டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளா யவர் பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்ட சோளேச்சரத் தானே (சேந்தனார் திருவிசைப்பா)



கமலாசனம் / பத்மபீடம்



வாகனத்திற்குரிய பெருமையனைத்துடனும் இப்பத்மாஸனம் போற்றப்படுவது ஆகும். வாகனபீடத்திற்கு மேலே நடுவே விரிந்த செந்தாமரை மலரும், அதன் மையவட்டக் கர்ணிகையில் லக்ஷ்மீதேவீ, முதலாக வாணீக்கும் உமையவளுக்கும் உரிய பீடமாக சாத்திரங்கள் குறித்திடுகின்றன. திருமால், பிரமன்,கணேசன், கந்தன் இவர்களுக்கும் பகலில் இவ்வாசனத்தில் வீதிஉலா செய்யப்படும். எல்லா தெய்வங்களுக்கும் கமலாசனம் பொருந்தும். பத்மாஸனத்தை நன்கு விரிந்த அகன்றஎட்டுஇதழ்களை எட்டுதிசையிலும் கொண்டதாக அமைத்திடுவர். கமலாஸனத்தை இவ்வாறே உள்ளிருந்து வெளிவிளம்புவரை பலஅடுக்குகளில் பூவிதழ்களைக் கொண்டு விளங்குவதும், உயரத்தில் மூன்றடுக்கு, அல்லது ஐந்தடுக்கு, அல்லது ஏழடுக்கு என்று அதிக அளவில் இதழ்களைப்பெற்று விரிந்தபாங்கில் காணப்படுவதும் மலர்ந்த தாமரைமலர் வடிவிலானதும் கமலாசனமாகும். இவ்வாகனத்தினை வாகனத்திற்கு ஈடாகவே இறைவனின் திருவீதியுலாவில் இடம்பெறச் செய்தல் மரபாகும். திருமகள் திருமாலுக்கு சிவப்புத்தாமரையாகவும், கலைமகள், நான்முகன் சிவனார் இவர்களுக்கு வெண்தாமரையாகவும் வண்ணம் இருப்பதுமுறையாகும். எல்லா தெய்வங்களின் திருவடிகளும் பிரியாதகமலாசனத்தில் இணைந்தே இருக்குமென்பதால் இதன் பொருமை அளிப்பரியதாகும்.

கிளிவாகனம் [சுகவாகனம்]



கிளிவாகனப் பெருமை

கிளிவாகனம் சாந்தவடிவமான தேவியர்களுக்கு ஏற்றதாகும். ஆலயத்தில் செய்யப்பட்டுள்ள இவ்வாகனம் மன்மதன் மனைவியான இரதிதேவிக்கு உரியது. கிளிதெய்வங்களோடு மிகஅருகில் கைகளில் இருக்கும் விசேஷ சிறப்புபெற்ற பறவையாகும். பறவையினங்களில் காதில்கேட்டதை எம்மொழியிலும் திரும்பச்சொல்லிப் பேசும்திறமை உடையது கிளி ஆகும். இது வாக்தேவியின் வடிவமானது. இதன் குரலோசையை தேவீ மாதங்கியும், உமையவளும் கேட்டபடி இருப்பர் என்கிறது சாத்திரம். கீரவாணி எனும் கிளியோசை மிகவும் இனிமையானது. இயல்பான தோற்றத்தில் அமைக்கப்படும் வாகனம் கிளி வாகனம் ஆகும்.

கிளிவாகன வடிவம்

கிளிவாகனத்தை வெளிர்பச்சை நிறத்திலும், இதன் மூக்கு, கண் இமைகளை சிவப்புநிறத்திலும், இயற்கையான கிளியின் தோற்றம் அமைந்ததாக இருக்கும். இதற்கும் கழுத்தில் முத்தாரமும் காலில் கொலுசும் அமைத்து அழகுசெய்வர். நிலையானவாகனத்தில்

மட்டும் தலையில் உயர்ந்துகாணப்படும் கொண்டையை அமைத்தல் தனிச்சிறப்பாகும். இதனை இடப் பெயர்ப்புநிலை வாகனமாக வாகனபீடத்தின்நடுவே அமைத்து, இதன் முதுகில் தெய்வத்து இருக்கையான பீடத்தை இரும்புத்தாங்கிகளில் நிலைத்ததாக வலுவுறு முதுகு பீடத்தையும் அமைத்திடுவது முறை.

கிளிவானம் (சுகவாகினி உமாதேவீதுதி)

பரந் தெழுந்த சமண் முதலாம் பரசமய விருள் நீங்கச்
சிரந் தழுவு சைவநெறித் திருநீற்றி னொளி விளங்க
அரந் தைகெடப் புகலியர்கோ னமுது செயத் திருமுலைப்பால்
சுரந் தளித்த சிவகாம சுந்தரி பூங் கழல் போற்றி

சேஷவாகனப் பெருமை

ஆயிரந்தலையுடைய பாம்பரசனாகிய ஆதிசேஷனை, வாகன மஞ் சமாகவும், படுக்கையாகவம், இருக்கையாகவும் கொண்ட தெய்வம் திருமாலே யாவார். சிவனாருக்கும் "அனந்தாஸனம்" என்னும் எட்டு பெரும்பாம்பகளின் இருக்கையில் பூசிக்கப்படுகிறார். இவருக்கு எண்ணிலாத்தலைகள் உள்ளமையால் இவர் "அனந்தர்" எனப்படுகிறார். சிவனாரின் பெருவிழாவிலும் பெருமாளின் பெருவிழாவிலும் இவரது சேஷவாகனம் தனிச்சிறப்பாக ஏற்று போற்றப்படுகிறது. புராணத்துதிகள், தெய்வங்களை அனந்தாஸனத்திலிருப்பவராக, பணாமண்டலஸாஹஸ்ர பணிராஜ க்ருதாஸனாய நம: என்கின்றன. மேலும் ஒன்பது பாம்புகளலான இருக்கையை உடையவராக நவநாகஸ நாத்யாஸிநே நம: என்கிறது. நவநாக விபூஷணாய நம: என்கிறது. சிவஸஹஸ்ரநாமதுதியில் நாகேந்திர வாஹனராக, வ்யாளரூபாய நம:, ஸர்ப்பசீரநீவாஸாய நம: பன்னகாஸனா் அனந்தாஸ்திதர் என்று போற்றப்படுதாலும் பாம்பரசனான நாகவாஹன பெருமை உணரத்தக்கது. ஆதிசேஷ னே பதஞ்சலி முனிவர பூசித்து சிவதாண்டவம் கண்டார்.

சேஷவாகன வடிவம்

சேஷவாகனமானது, ஐந்துதலைகளைஉடைய பெரியஅளவிலான ஒரேபடத்துடன் கூடியதாய், மஹாநாகவாகனம் எனப்படுவதாகும். ஐந்துதலைகளும் தெய்வத்திருமேனியின் உச்சிமீது உரியஅளவு உயரத்தில் குடைபோன்று கவிந்திருக்க, அதன்கீழ் வட்டவடிவில் அப்பாம்பின் உடல் சுருண்டு அடுக்கடுக்காக மூன்றுசுற்று தவிசென அமைந்து காணப்படும். இதன் நடுவேஉள்ள பீடத்தின்மீதே இறைமூர்த்தம் அமர்த்தப்பெற்று வீதிஉலா போகும் சேஷனின் ஐந்துதலைகளும் தனித்தனியே அமைந்திடப் படம்மட்டும் ஒன்றாகவும் அகன்று விரிந்தும் காணப்படும் பெருநாகத்தலையில் சிகப்புக் கண்ணாடிக்கற்கள் பதித்தப் பெற்றநிலையில் உறுத்துப்பார்க்கும் கண்கள் இருக்கும். இதன் இரண்டாகப்பிளவுற்ற நாக்கு, வெளியில்வந்து துழாவும் வண்ணம் அமைந்திருக்கும். சுருண்ட வால்பகுதியிலிருந்து மேலெழும் உடல் சற்று தடிப்புற்றதாக உள்ளமையால் தலையின் பளு இயல்பாகத் தாங்கப்படுகிறது. பொன்நிறத்திலோ மஞ்சள்நிறத்திலோ சேஷவாகனம் விளங்கும். திருப்பாற்கடலில் குடிகொண்டுள்ளவரும், பாதாள உலகத்திற்குரிய நாயகராகவும், நாகர்களின் அரசராகவும், எல்லாதேவர்களுக்கும் விருப்பமானவராகவும், பேரண்டத்தைத்தாங்கும் ஒப்பற்ற பெரும்வலிமை பெற்றவராகவும், பூமியைத் தனது பல்லாயிரம் தலைகளால் தாங்கிவருபவராகவும், போற்றிவழிபடப்படுகிறார். கருடனைக் கண்டு அஞ்சும் நாகஇனத்திற்கு தலைவனாகவும் கருடனுக்கு இணையாகவும் திருமாலுக்கு வாகனமாக விளங்குபவர். தனியாகவே மஹாநாகங்கள் எட்டும் வழிபாட்டில் உள்ளவை. சிவனாரிடம் உள்ள பாம்பு, ஐந்துதலைகள் உள்ள "வாசுகி என்னும் மஹாநாகம் ஆகும். புராணங்களில் தக்ஷகன், கார்க்கோடகன் முதலியன வரலாறுகளை பெற்றுள்ள மஹாநாகங்கள் ஆகும். இது மூச்சுப்பயிற்சியை உணர்த்துவதாய் யோகநிலையை தவநெறியை உணர்த்தும் வாகனமாகும்.

இந்த நாகவாகனம் ஏழுதலைகளுடனோ, ஒன்பது தலைகளுடனோ அமைக்கப்படுவதுமுண்டு. வால்உடல்சுற்றும், மூன்று அல்லது ஐந்து சுற்றுகளாயும் அமைக்கப்படும். வால்முனை முன்னே வலப்புறம் தனியே அமையும். வலமாக சுற்றி எழுந்த படமாகவும், தலைமீது மாணிக்கத்தின் சுடரொளிகொண்டையை உடையதாகவும் அழகுற அமைக்கப்படும். திருப்பாற்றுறையில் சம்பந்தர், "ஆடல் நாகம் அசைத்தாரே" என்கிறார்.



நாகவாகனம்

ஆலயதிருவிழாவில் சிவபெருமான் ஐந்துதலை நாகவாகனத்தில் எழுந்தருள்வார். இதனை அரவாபரணர் என்றும் படப்பாம்பர் என்றும், புற்றீசர், புற்றிடங்கொண்டார், புற்றாடுஅரவா என்றும் மெய்யடியார்கள் சிவனைப் போற்றுவர். ஐம்பெரும் பூழீங்களின் அம்சத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள அரவம் நல்லறத்தின் வடிவாகி, அனைத்து தெய்வங்களும் மகிழ்ந்தேறும் ஊர்தியாயும் உள்ளது.

மி. ஞானசம்பந்தர். இலகுமணிநாகம் பூண்நாண் ஆரமாகப் பூண்டார், என்றும், வேகநாகம் வீக்கிய அரையனார் எனறும்,ஆரமாகிய பாம்பினார் என்றும், அரவு நீள்சடைக் கன்னியார் என்றும், ஐந்தலைஅரவு கொண்டு அரைக்கசைத்த சந்தவெண்பொடி சங்கரனே, என்றும், நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம் ஏந்தினை என்றும், அரைபுல்கும் ஐந்தலையாடல் அரவம் அமைய என்றும் கூறுவார்.

மிமி.நாவுக்கரசர் பல்லாடுதலை சடைமேல் உடையான் தன்னை என்றும், 'புற்றினார் அறவம் புலித்தோல்மிசை சுற்றினார்" என்றும், அரவக் கச்சையாய் என்றும், "செம்பொன் பள்ளி ஐயர் கையேதோர் ஐந்தலைநாகமே என்றும்,

மிமிமி. சுந்தரமூர்த்திசுவாமிகள், புற்றாடு அரவா என்றும், "ஆடுஅரசம் அரைமேல் புலி ஈருரிவை போர்த்தவர்" என்றும், "தீவாய் அரவாடுசடையானை" என்றும் பலரும் பலவாறு சிவனிடம் ஐந்துதலைநாகத்தை பலவகையிலும் அணிலன்களாக போற்றியுள்ளனர். இவ்விதம் அளப்பரிய பெருமைஉடையது சிவனாரின் வாசுகி எனும் மகாநாகம் என்றறிக.

தோட்டீரே தொத்தி ஐந்தலை நாகத்தை
ஆட்டீரே அடியார் வினை
ஓட்டீரே உம்மை ஏத்துதும் ஒத்தூர்
நாட்டீரே அருள் நல்குமே (ஞானசம்பந்தர்)

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன்
உணர்ந்து உள்ளத்தால்
புற்றாடு அரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே (சுந்தரமூர்த்திசுவாமிகள்)

இடரினும் தளரினும் எனததருநோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல் தனில் அமு தொடு கலந்த நஞ்சை
மிரினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உன தின் அருள் ஆவடு துறை அரனே
(ஞான சம்பந்தர்)



யாளிவாகனம்

யாளி வாகனப் பெருமை

யாளிவாகனம் எனப்படுவது சிம்மவாகனத்தைப் போன்ற உடலமைப்பு உடையதாயினும் இதன் முகம், முன்னங்கால், பிடரி ஆகிய பகுதிகளின் வடிவமைப்பு சிம்மத்தைக்காட்டிலும் மாறுபட்டதாக விளங்கும். அதாவது முகத்தில் சிறுதுதிக்கைபோன்ற நீண்டகுழல்மூக்கு உடையதாக அமைத்திடுவர். அகாலமான, பரந்த சிங்கமுகமும், சினத்தால் சிவந்த பிதுங்கிய வட்டகண்களும், அகன்று உயர்ந்த நாசி துவாரங்களுடன் பெரிய மூக்கு, கடைவாய்கள், நீண்ட வளைந்த வாய், விரல்கள் அனைத்தும் திரண்டு உருண்டு கூரியநகங்களுடன் திகழும். கால்கள், சிறிதளவே விரைப்புடன் நிற்கும் பிடரிமுடிகள், இத்தகைய தோற்றத்துடன் யாளிவாகனம் சிம்மவடிவத்துடன் கற்பனை கலந்ததான வடிவத்தில் தூண்கள், படியின் பக்கச்சுவர்கள் இவற்றில் நிலைத்து உருவிலும் மரத்தில் பெயர்ப்பு வாகனமாயும் காணப்படுவதாகும். இந்த வாகனம் ருத்திரன், திருமால், சாஸ்தா, முதலிய உக்கிரதெய்வங்களுக்கு திருவிழாக்களில் கையாளப்படுவதாகும்.

யாளிவானகம் (யாளிவாகினி உமை)

கிரி எட்டும் என மழையைக் கிழித்து எட்டும்
புழைக்கை மதிக்கீற்றுக் கோட்டுக்
கரி எட்டும் சின மடங்கல் நால் எட்டும் எட் டெட்டுக்கணமும் தாங்க
விரி எட்டுத் திசை பரப்ப மயன் நிருமித்து
உதவிய அவ் விமானம் சாத்தி
அரி எட்டுத் திருஉருவப் பரஞ் சுடரை அருச்சிப்பான் ஆயினானே

(பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்)



கைலாசகிரிவாகனம்



கலாசகிரி வாகனப் பெருமை

சிவனாரின் உறைவிடமான கயிலாயமலைச்சிகர விமானமே, 'கைலாசவாகனம்" எனப்படுகிற சிவாலயவிழாவிற்கான சிறப்புவாகனம். இவ்வாகனம் சிற்பக்கலைநுட்பம் மிகுந்ததாக அங்கத்தில் பிறஅங்கங்களைக் கோர்த்து அச்சு முளைக்கோப்பு முறையில் மூன்றுபகுதிகள் கொண்டுள்ளதாக அமைக்கப்படும். இதன் அடியில் வாகனபீடம் அகலமானதாக கனமான நான்கு கால்களையும் அத்துடன் இணைந்து வாரை புகுமளவு இரும்புவளையங்களுடனும் அமைக்கப்பட்டு அதன்மேல் கைலாயமலையின் தோற்றம் பலஉருண்டைவடிவ பாறைகளுடன் வட்டம்வட்டமான முனைகளை அதாவது வட்டவிளிம்புகளைக் கொண்டதாக, மரத்தால் அமைக்கப்பட்டு, அதில் ஆங்காங்கு தேவர்கள் தவமுனிவர்கள், கற்பகமரம், காமதேனு பசு முதலிய தேவலோக சின்னங்களை ஓவியமாக உடையதாக அமைப்பர். மேலும் இந்தமலையின் அடியில் இராவணனை பத்துதலைகளும் இருபது கைகளும் கொண்டு தன் இரு கைகளை அம்மலையினடியில் வைத்து, மண்டியிட்டு முயன்று, மலையைத் தூக்கும் கோலத்திலோ அல்லது தனது கைகள் நசங்கிட வருந்தி தனது ஒருதலையையும், ஒருகையையும் தனியே துண்டித்து எடுத்து, அவற்றை வீணையைப்போலாக்கி ஸாமவேதகானத்தை இசைத்து அம்மலைமீதுள்ள மகேசனை மகிழ்விக்கும் பாவனையுடனோ இலங்கைவேந்தனான இராவணேச்வரன்

என்னும் சிவபக்தரை அமைத்திடுவர். இது மிகச்சிறந்தவரலாற்றுப் புகழ்மிக்கவாகனம். வேதாகமங்களும் புராணங்களும் சிவனை கைலாஸகிரிவாஸீ என்றும், கைலாஸ சிகாலஸீனர் என்றும் கைலாஸ சைல நிலயர் என்றும் போற்றுகின்றன. மலைகளுள் சிறந்த மலை கயிலாயபர்வதம். இது ஸகலதேவர்களும் வந்து விளையாடி மகிழந்திடும் சிவனுறை மலையாம். இம்மலையின் தென்பால் ஆலமரத்தடியிலமர்ந்து சிவனார் வேதசிவாகமங்களை தேவமுனீந்த்திரர்களுக்கு உபதேசித்து வெளியிட்டதாக ஆகமங்கள் கூறுகின்றன. இம்மலையை இராவணம் பெயர்த்தெடுக்க முயன்று தோல்வியுற்றகானம்பாடி அருள்பெற்றான். திருக்கயிலாய மலையின் பெருமை தேவர்களாலும் கூற இயலாததாகும்.

கைலாசகிரி வாகனப் வடிவம்

இதில் இராவணன் இடது முழங்காலைத் தரையில்ஊன்றி, வலது பாதத்தை பீடத்தில் ஊன்றி இருகைகளால் வலிமையுடன் மலையை பெயர்த்தெடுப்பதுபோன்ற கோலத்தில், அகன்றபொலிவுற்ற மார்பும், திரண்ட வலிய கைகால்களும் உடையவனாக, அமைக்கப்படுவான். கயிலைமலைத் தோற்றத்தின்மேல் விளிம்பாக சமசதுரமுகடு அமைகிறது. சதுரமுகப்பின் நான்குபுறமுனைகளிலும் யாளிஉருவங்கள் மிகநுட்பமாக செதுக்கப்படும். பக்கப்பகுதிகளில் யானை, எருது, மான், புலி, பாம்பு போன்ற உயிரினங்களும் உயிர்ப்புடன் அழகிய சிறு சிறு சிற்பங்களாகச் செதுக்கப்பெற்று திகழ்வனவாகும்.

இதன் மீது இரண்டாம் பகுதியாக விமானத்தட்டு இடம்பெற்று, அத்துடன் நான்குதிசைகளிலும் நான்குவளைய நுழைவாயில்களைக் கொண்டுமேலே கொடுங்கைபோன்ற வளைவுக்கூரையினையும், கீழிருந்து தொடரும் அமைப்பாகவே மேலெழுந்துநிற்கும் சதுரவடிவமான மாடப்பிரை யினை அமைத்து இதன்மீது மூன்றாம்பகுதியாகிய கைலாசசிகரம் என்பது கோயில்விமான உருவத்தில் பீடம், கண்டம், சிரஸ், என்னும் முப்பகுதிகளுடன் ஸ்ரீவிமானம் எனும் தலைப்பகுதி, ஒன்று அல்லது மூன்று ஸ்தூபி உள்ளவாறு மாடப்புரை உச்சித்தளத்தில் கோப்புமுறையில் இணைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு முப்பெரும்பகுதிகளுடன் "கையிலாசவாகனம்" விளங்குவதாகும்.

கைலாச பர்வத வாகனம் உருவகதத்துவம்

வேதம் கிரீசன் என்றும், பர்வதேசன் என்றும், கூறி அதனை சிவனது உறைவிடம் அனைத்து தேவர்களும் வந்து மிகழுமிடம், அதில் என் மனம் ஒன்றி மகிழட்டும் என்று போற்றுகிறது. இக்கருத்தை வேதமானது.

கைலாச சிகரே ரம்யே சங்கரஸ்ய சிவாலயே |

தேவதாஸ் தத்ர மோதந்தே தன்மே மனஸ் சிஸங்கல்ப மஸ்து. ||

எனக்கூறுவதால் அறியலாம். சிவனுக்கு உகந்தமலை கயிலைமலை எனப்படுவதாகும். கயிலைமலையிலு கல்லாலின் கீழமர்ந்து மறைபொருளை முனிவர்களுக்கு உபதேசித்த ஒப்பற்ற ஆசான் உறையும் மலை, சிவனடியார்கள் தேடி அடையவிரும்பும் புனிதப் பனிமலை கயிலையாகும். இந்த மலையை இராவணன் தமது தேசத்திற்கு கொண்டுசெல்ல விரும்பி அதனை பெயர்த்தெடுக்க முயன்று தோற்றுத் துதித்த மலை கயிலைமலை. இதனை மணிமாடக் கோயிலுடன் மலைமீதுள்ள கோயில்வாகனமாய் பயன்படுத்துவர். அல்லது பத்துதலை ராவணகோலத்தோடும் அமைப்பர்.

கயிலைமலைநாதர்துதி

தாதார் கொன்ற தயங்கும் முடியர் முயங்கும் மடவாளை
போதார் பாகமாக வைத்த புனிதர் பனி மல்கும்
மூதார் உலகில் முனிவர் உடனாய் அறம் நான்கு அருள்செய்த
காதார் குழையர் வேதத்திரளர் கயிலைமலையாரே

(திருஞானசம்பந்தர்தேவாரம்)

பொன்னின் வெண் திருநீறு புனந்தெனப்
பன்னும் நீள்பனி மால் வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும்
மன்னி வாழ் கயிலைத் திருமா மலை (சேக்கிழார் பெரியபுராணம்)

எளிய நா மொழியா இலங்கைக்கு இறை
களியி னால் கைலாயம் எடுத்தவன்
நெளிய ஊன்றவல்லான் அமர் நின்றியூர்
அளியினால் தொழுவார் வினை அல்குமே (அப்பர் தேவாரம்)

பக்தஇராவண கயிலைவாகனம்

திருவிழாவில் இராவணன் பெயர்த்து எடுக்கும் கயிலைமலைமீது இறைவன் எழுந்தருள்வது தனிச்சிறப்பாகும். ராக்ஷஸனாயினும் தனது பக்தனுக்கு வரம் தரும் வள்ளல் என்பதை உணர்த்தும் வாகனம். ராவணன் ஆணவமலம் முதிர்ந்த ஜீவாத்மா. அகங்காரத்தால் எதுவும் செய்யக்கூசாதவன். அவன் தனது தவவலிமைத் திமிரால் கைலாயமலையைத் தூக்கிஎடுக்க முயன்றான். அதை அறிநத சிவனகால் பெருவிரல் ஒன்றை ஊன்றி வைக்க, நசுங்கிஅலறி கைநரம்பால் வீணையை உருவாக்கி, ஸாமவேதகானம் பாடினான். இறைவன் அகமகிழ்ந்து அவனுக்கு அருள் புரிந்தார். இவ்வாகனம் இறையின் காத்தல் தொழிலை உணர்த்துவதாகும். இறைவனுக்கு தீங்குசெய்தவர்களும் அடங்கிநின்றுவழிபடுவாராயின் அவருக்கும் இறைவன் அருள்தருவார் என்பதும், இறைவனின் பெருந்தன்மையும் இதனால் விளங்கும். இக்காட்சியை அடியார்கள் மூவரும் பலவாறு போற்றிப் புகழ்ந்துள்ளனர். ஞானசம்பந்தர் “ஏறுடைமணி முடிராவணனை ஆரிடர்படவரை அடர்த்தவ” என்றும், நாவுக்கரசர் “இலங்கைமன்னன் இருபது தோளிற மலங்கமாலவரை மேல்விரல் வைத்தவர்” “இலங்கைக்கு இறைகளி யினால் கயிலாயம் எடுத்தவன் நெளிய ஊன்றவல்லான் அமர்நின்றியூர்” என்கிறார். சுந்தரமூர்த்திகள் எடுத்தான்திரள்தோள் முடிகள் பத்தும் இடிய விரல் வைத்தார், என்றும் இவ்விதம் பலபதிகங்களிலும் இறைவனின் பக்தவாத்ஸல்யத்தைப் போற்றியுள்ளனர்.

இராவணஇசைக் கயிலைமலையார் துதி

குன்றம் அது எடுத்தான் உடல் தோளும் நெறிவாக
நின்றங் கொருவிரலால் உரவைத்தான் நின்றியூரை
நன்றார் தரு புகலித் தமிழ் ஞானம் மிகுபந்தன்
குன்றாத் தமிழ் சொல்லக்குறைவின்றி நிறைபுகழே

(ஞானசம்பந்தர் தேவாரம்)

எடுத்தனன் எழிற்கயிலை இலங்கையர் மன்னன் தன்னை
அடுத்தொரு விரலா லூன்ற அலறிப்போய் அவனும் வீழ்ந்து
விடுத்தனன் கை நரம்பால் வேத கீதங்கள் பாடக்
கொடுத்தனன் கொற்றவா நாள் குறுக்கை வீரட்டனாரே

(நாவுக்கரசர் திருநேரிசை)



பூதவாஹன தனிச்சிறப்பு

பூதவாகனப் பெருமை

சிவன் பஞ்சபூதங்களுக்கும் தலைவன் என்பதை உணர்த்துவதாக பூதநாயகன், பூதேசன், பூதநாதன் என்று போற்றப்படுதலால் சிவன்கோயில் திருவிழாக்களில்மட்டும் வாகனங்களுள் பூதவாகனம் தனிச்சிறப்புபெற்று விளங்குவதாகும். சிவபஞ்சாட்சரங்களும் பஞ்சபூத அம்சமானவை. எனவே ஸர்வபூதஅம்சமாகவும், பூதவாஹனம் சிவகணத்தில் உள்ளவரான கும்போதரர் என்றும் சேவகபூதவாஹனம் என்றும் போற்றப்படும் வாகனமாகும். புராணத்தின் சிவஸஹஸ்ர நாமாஸ் துதியில், சிவனார், பூதேசராக கூறப்படுகிறார். 163ல் பூதசாரிணே நம: 536ல் பூதவாஹண ஸாரதயே நம:, 550ல் பூதநிஷேவிதாய நம:, 632ல் பூதபாவனர், 648ல் குருபூதாய நம:, 687ல் பூதாலயாய நம:, 688ல் பூதபதயே நம:, 690 ஸர்வபூதாநாம் வாஹித்ரேநம:, ஸ்ரவபூதாநாம் நிலயாய நம: என்றும் பலவாறு போற்றப்படுதலால் பூதவாஹனப் பெருமை உணர்த்தக்கது.

பூதவாகன வடிவம்

பூதத்தின் உடலமைப்பானது பஞ்சதால பகுப்புமான முறையில் குள்ளமாகவும், பருத்தவலிமைமிக்க தாயுள்ள கட்டுடலோடும், வடிவமைத்திடவேண்டும். வைணவக்கோயிலின் கருடவாகனம் அனுமந்தவானம் போன்ற அமைப்பிலக்கணம் கொண்ட வாகனமாக,

இது அமைக்கத்தக்கது. பருமனிலும் அளவினிலும். தோற்றத்திலும் பெரியவாகனம் பூதவாகனமே யாகும், சுருண்ட படர்ந்த தலைமுடியும், அகன்ற வட்டவடிவமுகமும். உருண்டுதிரண்டு வெளிப்பிதுங்கிக் காணப்படும் உக்கிரமான வட்டவிழிப்பார்வையும், நெற்றியில் திருநீற்றுப்பட்டையும், குங்குமத் திலகமும், விரிந்தநாசியும், தாழ்ந்தகாதுகளில் பெருங்குண்டலங்களும்,, அடர்ந்த பெருமீசையும், சற்றேதிறந்த வாயினின்றும் வெளிப்படும். வாயில்கடையில் இருகோரைப்பற்கள், குறுகிய தாழ்வாய், குறுகியகழுத்து, அகன்றமார்பு, பருத்தவாயிறு, திரண்டு உருண்ட குறுங்கால்கள் திரண்டு உருண்ட நான்கு குறுங்கைகள் உடையதும் கழுத்தில் ஆரம்,அதிலிருந்து வயிற்றின் இருபுறமும் தொங்கி அரைஞாணோடு சேரும் உதரபந்தம், வயிற்றில்சுற்றிய கண்டமாலை, கைகளில் கடகம் கால்களில் பெருந்தண்டையணி, அரைக்கச்சணிந்ததோற்றம். இவையே பூதவாகன ஒப்பனைமுறையாம் பச்சை நிறமேனியும் ஆடையை அரைக்கச்சு உடுத்தி சிவப்புநிறமாகவும் அல்லது கருமைசிவப்பு நிறமாற்றங்களுடனே அமைக்கப்படும், பின் இருகைகளில் வலதுபின்கை சின்முத்திரைகாட்டுமாறும், முன்கை தன்மார்புக்கெதிரரே எழுந்து விரிந்து இறைப்புகழ்பாவும் தியானத்தோற்றத்திலும் அமையும். கீழ்நோக்கிய அல்லது மேல்நோக்கிய கைகளுடனோ, கதைஏந்திய அமைப்பிலோ இருகைஅல்லது நான்கு கைகளுடன் அமைக்கப்படும். இது சாஸ்தாவிற்கும் ஏற்றவாகனமாகும். இவ்வாறே காளிக்கு பெண்ணுருவில் பூதகிவாகனம் அமைக்கப்படும். வலது முழங்காலை பீடத்தில் ஊன்றி இடதுகால்பாதம் பீடத்தில் பின்புறம் மடித்து பொருந்த மண்டியிட்டு தேவனைத்தன் முதுகில் தாங்கிடும் தோரணையில் அமைக்கப்படும் வாகனமாகும். இறைவனைத்தாங்கும் பெரும் பேறுபெற்ற பெருமிதஉணர்வு முகத்தில் துலங்கிடுமாறு சிறந்தபக்தனான பூதத்தலைவனை அமைப்பதுமுறை.

பூதவாகனம் உருவதத்துவம்

திருவிழாவில் பூதநாயகனான சிவபெருமான் பூதவாகனத்தின்மீது எழுந்தருளிகாட்சிதருவது விருத்திக்ரமமான சங்காரக்கோலமாம். நாதமான ஐந்தெழுத்து மந்திரமும், சப்தப்பிரபஞ்சம் அர்த்த ப்ரபஞ்சம் என்னும் அசையும் அசையாத்தனமையதான இப்பிரபஞ்சம் எனும் உலகெலாம் பஞ்ச பூதங்களின் விரிவான ஸ்தூலசூட்சுமமே என்பதையும், அம்மூவுலக மூலகாரணத் தலைவன் சிவன் என்பதையும் உணர்த்துவதாகும். சினடியில் சேவகனாய் பணியாற்றும் பேறுபெற்ற சிவகணத்தவரே பூதமாம். சிவநடனத்தின்போது முழவுவாசிப்பவரும்பூதம் ஆகும்.

பூதவாகனர் துதி

பூதத்தின்மேலமர்ந்த ஈசனை, சம்பந்தர் "பூதஇன்ப்படை நின்றிசைபாடவும் ஆடுவர்". என்றும், அப்பர்சுவாமி "பூதம் பாடநின்று

ஆடும் புனிதானார்" என்றும், சுந்தரர்" "எண் கணம் போற்ற இல்லம் நம்பி". என்றும் போற்றியுள்ளனர்

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவ நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே (அப்பர்சுவாமி)

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே

(சுந்தரமூர்த்திதேவாரம்)

பூதங்கள் ஐந்தாகி புலனாகிப் பொறியாகி
வேதங்கள் அனைத்துமாய் பேதமிலாப் பெருமையனை
கேதங்கள் கெடுத்தாண்ட கிளர்ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே.
(மாணிக்கவாசகர் திருவாசகம்)

சூரியப்பிரபை வாகனம்



சூரியப்பிரபை வாகனப் பெருமை

உலகின் கண்கண்ட தெய்வமாய் விளங்கிடும் செக்கர்வான் ஒளியானை சூரியமண்டலத்தை தெய்வத்தின் பின்புறம் தலைக்குமேல் ஒளிவட்டமாக அமைப்பதே "சூரியப்பிரபை" எனப்படுகிற தேஜோமண்டல வடிவமைப்பாகும். "காலமும் ஞாயிறும் அகிநின்றார் கழல் பேணவல்லார்" என்பார் சுந்தரர். வேதாகம புராணங்கள் தெய்வ வழிபாட்டை மண்டலத்தில் செய்யக்கூறுகின்றன. தேவதைகளும் புனித தீர்த்தங்களும் ரவி மண்டலத் திலிருந்தே அழைக்கப்பட்டும். ஒடுக்கப்பட்டு தொழப்படுகின்றன. தெய்வத்தின் கண்கண்ட உருவம் சூரியனாம். பானுமண்ல மத்யஸ்தர் என்றும், திவாகரரதாரூடர் என்றும், ஆதித்ய பிம்ப மத்யஸ்தர் என்றும் சதசூர்யஸமப்ரபர் என்றும் தேவர்கள் போற்றப்படுவதால் சூரியமண்டலப் பெருமை உணரத்தக்கதாகும்.

சூரியப்பிரபை வாகனப் வடிவம்



இந்த வாஹனம் உபபீடம் போன்ற அல்லது அதிஷ்டானவர்க்கமேடையை ஒத்ததாக ஒரு வலுவான வாஹனபீடத்தை தேவையான உயரத்திற் முதலில் அமைத்துக்கொண்டு, அதன்நடுவே இறைவன் உறையும் பத்மபீடத்தை ஒருகை முழஉயரத்திற்கு சிறியதாக அமைத்திடுவர். இத்தேவதாபீடத்திற்குப்

பின்புறத்தில் இருளிமரம் அல்லது இலுப்பைமரத் தினுடைய கனமாக உள்ள சட்டத்தினை வட்டவடிவமாக்கி சுமார் நான்குஅடி அளவில் விட்ட முடையதாக வட்டப்பரப்பினை மூன்றுவளையமாக்கி இணைத்து அமைப்பர். ஒருஅடி அகலவிட்டமுடைய மையப்பரப்பே சூரியவடிவில் அமைக்கப்படுகிறது. இதில் வட்டத்தின் விளிம்புகள் கண்ணாடித் துண்டுகள் பதிக்கப்பெற்றனவாக ஒளிநிரம்பிக் காணப்படும். இதில் மரச்சட்டத்தால் இதற்குப் பின்னால் குத்துக்கால்தாங்கலை அமைத்திடுவர். இதன் வெளிவட்டவிளிம்பில் சூரியஒளிக்கிரணமென வட்டவடிவக் கண்ணாடிப்பதக்கங்கள் அல்லது தீச்சுடரெனத் தோற்றம் கொள்ளும் மரவேலை ஒப்பனைகள் அல்லது இவை இரண்டுமோ, தனித்தனியே செய்யப்பட்டு சீரான இடைவெளியில்உள்ள குழிகளில் கூர்முனைக் கோப்புமுறையில்பொருத்தி, அழகுபடுத்துவர். இவ்வாறு சூரியபிம்பத்தில் பிரபையாகக் கொள்வது, (பின்புறம் திருவாசிபோல அமைப்பது) இறைவன் சூரியமண்டலம் சந்திரமண்டலம் அக்னிமண்டலம் இவற்றுள்ளும், இவற்றைக்கடந்தும் ஒளிரும் இறைவனதுபுகழைப் பெருகிடச்செய்யும் அமைப்பு முறையாகவும், இறைவனின் அருளொளியை உலகறியச் செய்திடும் நோக்கமாகவும் இவ்வடிவமைப்பு அமைந்திடுகிறது. இந்த வாஹனம் பெரும்பாலும் பகல் உர்வலத்தில் இடம்பெறும். சில நேரங்களில் இரவுநேர உலாக்களில் இதன் விளம்புக் காண்ணாடிப்பதிப்புகள் பகல்போல் ஒளிவீசித் திகழ்கின்றன. சிவனாரின் பெருவிழாவில் இரண்டாம்நாளில் திருவீதியுலாவிற்கு இச் சூரியபிரபைவாகனம் இடம்பெறுகிறது. இதனை இரு பக்க வாரையுடன்பொருத்தி அடியவர்கள் தோள்களிலோ, பட்டரைவண்டியில் மேலே வைத்து, காளைகளைப் பூட்டியோ வீதி உலாவிற்கு பயன்படுத்துவது வழக்கம்.

பாயுங் குதிரை வாகனம்



குதிரை வாகனப் பெருமை

வாகனம் என்றாலே தேவர்கள் மனிதர்கள் யாவருக்கும் அதிகம் விருப்பமானதும் பயன்பாட்டிலிருப்பதும் அரசலக்ஷணம் பொருந்தியதும் குதிரைவாகனமே. சூரியன், சிவன், திருமால், துர்கை, லக்ஷ்மி, சாஸ்தா முதலான பலதெய்வங்களுக்கு குதிரை வாகனமாகும். இந்தவாஹனம் பலவாறு பலபொருளில் பலநிலைகளில் அமைக்கப்படுவது. நிற்குங்குதிரை, பாயுங்குதிரை (தாவும்நிலை) ஆடுங்குதிரை, ஓடுங்குதிரை முதலியன. ஆலயபுறப்பாட்டிற்கு பாயுங்குதிரையை வாகனமாக அமைத்திடுவர். சிவ ஆலயங்களில் இது அசைந்தாடும் வகையில் ஆடுங்குதிரை வாகனமாய் உள்ளது. மரத்தால் செய்யப்படும் குதிரை எடுப்புவாகனங்கள் தச்சுக்கலையின் சிறந்த புதுமைப்படைப்பாகவே விளங்குவனவாகும். இதற்கு உரியஅளவும், உருவ இலக்கணமும் சில்பரத்னம், மயமதம் முதலிய நூல்களில் கூறப்படுள்ளன. இக்குதிரையே வடமொழியில் அச்வம், வாஜி, ஹயம், துரகம் எனும் பெயர்களைப்பெறும்.

குதிரை வாகன வடிவம்

குதிரைவாகனம் ரிஷபவானத்தைப்போல நான்குகால்களும் பீடத்தில் ஊன்றியபடி படியநிற்பதைப்போல் செய்யப்பெறுவதில்லை. பொதுவாக அச்வலக்ஷணம் ஒருபாதக் குளம்பையேனும் உயர்த்தியபடி நிற்பது. உயர்தர குதிரையின் இயல்பான உருவஇலக்கணத்துடன் கூடியதாக முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கியநிலையில்

பின்னங்கால்களைப் பீடத்தில் ஊன்றித் தாவும்அமைப்பில் செய்யப்படும். இவ்வாறமைந்த வடிவினைப் பாயுங்குதிரைவாகனம் என்றும், வெட்டுக்குதிரைவாகனம் என்றும் துறையோர் கூறுவதுவழக்கம். இதில் முகக்கயிறு, கடிவாளம்,நெற்றிப்பட்டம், காதுக்குப்பி, தலைக்குஞ் சத்திரள் ஆகிய முகத்தணிகளும், கழுத்துக்கயிறு, மணிமாலை பதக்கச்சரம், கண்டமாலைபோன்ற கழுத்தணிகளும், அதினின்றும் தொங்கி முன்சப்பைகளுடன் பொருந்திக்காணப்படும் கண்டபதக்கமும். முன்கால்களின்மேல் மூட்டில் வாகுவலயம் போலும் அணியும், குளம்பினையடுத்த மூட்டுப்பகுதியில் தண்டையும், அவ்வாறே பின்கால்களில் காணப்படும் அணிகளும், முதுகில் ஆஸனத்திற்காகப் போர்த்தப்பட்டுள்ள பொன்வண்ணச் சித்திரப்போர்வைவிரிப்பும், மார்பின்பதக்கமும் சங்கிலியும், குதிரையின் வனப்பினை ஈடிணையற்றதாக ஆக்குவனவாகும்.

பின்கால்கள் வளைந்து தரையில்ஊன்றிக் காணப்பட முன்கால்கள் இரண்டும் தாவிப்பாயும் தோற்றத்தில் அமைந்திட ஒளிபாய்ந்தகண்களும், வெளிப்பட்டுத் தொங்கும்குறியும், அதன் விரைவின் முயற்சியினை சொல்பவைகளாகும். வளைந்தபுருவங்களும், எழுந்தநாசியும், விரிந்தவாயும், தொங்கும் நாக்கும், தெரியும் பற்களும், தடித்ததாடையும், துடிக்கும்காதுகளும் குதிரையின் ஆர்வப்பெருமையினை எடுத்தியம்புவனவாகும்.

பாயுங்குதிரைவாகனத்தில் அருமைகளாவன, கடமையில் ஈட்டுபாட்டுடன் திகழும் உறுத்தமுகமும், கீழ்நோக்கிப்பார்க்கும் பார்வையும், சுளித்தமடிப்புடன் திகழும் உதடுகளும், வெட்டுக்குதிரையின் அருமைகளாகும். கடிவாளத்திலிருந்து தொங்கும் பட்டுத்துண்டினை குதிரையின் முன்பாகப் பற்றிநிற்கும் வீரனின்உருவம், முன்இருபாதங்களை தன் இருதோள்களில் தாங்கும்வகையிலும் அமைக்கப்படுவதுண்டு. குதிரையின் தலையில் பிடரிமயிர் விரல்உயரத்திலும், கழுத்தில்உள்ள பிடரிமயிரை நீளமாக உயரமாக அழகுற துண்டித்திருத்தல் அழகைக் கூட்டுவதாகும். குதிரையின் முதுகின்மேல் ஸ்தூரா என்னும் உறுப்பும் தேவதாபீடமும் அமைக்கப்பட்டிருக்கும்.

ஆடுங்குதிரைவாகனம்

ஆடுங்குதிரை எனப்படுவது மேற்கூறிய பாயுங்குதிரையாக உருச்செய்யப்பட்ட குதிரையின் அடிவயிற்றில் நீண்டசதுரமாக உட்புரையாக அமைக்கப்பட்டிருக்கும் பீடத்தின் நடுவிலிருந்து எழும்பியதாக நிறுத்தப்படும். குத்துக்காலில் புரைப்பகுதி அமையபீடத்தில் அடிக்கால்கள் பொருந்தாமல், ஒருசாண்உயரத்தில் நிற்கும்அளவில் வாகனஉருவை வைத்து, நடு குத்துக்காலின் குறுக்கே இரும்புக்கம்பியிட்டு, இருபுறமும் பொருந்தச் செய்யப்பட்டுள்ளது.

குத்துக்காலின் தலைப்பில்உள்ள பீடத்தில் நிலையாக திருமேனி அசைவில்லாமல்இருக்க, குத்துக்காலில் குறுக்காணியால் தூக்கமாகப் பிணிக்கப்பட்டுள்ள குதிரையை முன்பின் அசைத்தால், அது பாய்ந்துசெல்வதுபோல் அசைகின்றது. அசைவின்போது குத்துக்கால் பீடத்தில் தடைஉண்டாகாமல் நீண்டசதுரப்புரையின் (கூடுவின்) நடுவே குத்துக்கால்பீடம் நிற்குமாறு புரைஇடைவெளி சற்று கூடுதலாகவே அமைந்திருப்பதால் முன்பின் ஆட்டம் ஒரே சீராக அமைந்திடும். இவ்வாறு ஆடுங்குதிரைவாகனத்தை தச்சுக்கலைஞர்கள் அமைப்பர். குதிரைவாகனம் பெருவிழாவில் 8ம்நாளில் பரிவேட்டை எனும் நிகழ்ச்சியில் திருவிழாவில் இடம்பெறும். இவ்வாறே அசையாதவாறு பாயும்குதிரை அல்லது நிற்கும்குதிரையை ஐயனார் கோயிலில் செங்கற்சுதையால் மண்ணீட்டுமுறையாலும் செய்திடுவர். ஐயனார்குதிரையில் சிறப்புஅமைப்பு வெளியே பிதுங்கி உருட்டிவிழிக்கும் விழிகளும், விரைப்பாகநிற்கும் நான்குகால்களும் இதற்கே அமைந்த தனிப்பெருஞ்சிறப்பாகும் இதனை முன்புறம் வீரனுடனும், இருபக்கங்களில் பூதகணங்களோடும் தாங்கிகளாகக்கொண்டு பெரியஅளவில் அதிக உயரத்தில் சுதையில் நிலைப்புக் குதிரைவாகனத்தை அமைத்திடுவர்.

குதிரைவாகனம் (வேடர்பறிலீலை)

திருவிழாவில் இறைவன் புரவியில் வீதிவலம்வருதல் தனிச்சிறப்பாம். குதிரை ஸகலதெய்வாம்சம் நிறைந்த வேள்வியின் வடிவமுடையதாம். குதிரைஏறி வலம்வருதல் வேட்டைத்திருவிழா

எனவும், சங்கார யாத்திரை, மிருகயாயாத்திரை என்றும் கூறப்படும். இவ்வேட்டையில் பன்றிபோன்ற ஆணவமலமும், மான்போன்ற கன்மமலமும், பறவை போன்ற மாயாமலமும் ஆகிய மும் மலங்களும் ஆன்மாவைச் சார்ந்து நின்று, வருத்தும் தீயோர் துஷ்டர்களாம் அஞ் ஞானத்தை உண்டு பண்ணுகிறமும்மலங்களை அடக்கி, ஆட்சிசெய்யும் சிவபெருமான் சாயுச்சியம் கொடுக்கும் குறிப்பாகவே இவ்விழா நடைபெறுவதாம். இதனை எட்டாம்நாளில் செய்வர். குதிரையானது நால்வேதநெறிகளையும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை புருஷார்த்தங்களை கால்களாயும், பரஞானம் அபரஞானம் இவற்றை இருகண்களாயும், விதிமுறை என்பதை முகமாகவும், நிஷேதம் என்னும் விலக்குமுறையை வாலாயும், ஆகமங்களை ஆபரணங்களாயும், மந்திரங்களை பாதசாரமாயும் (நடையாயும்), பிரணவத்தைக் கடிவாளமாயும், அண்டகோடிகளாகிய மூவுலகங்களை முதுகுப் பகுதியாகவும், உடநிடதங்களை முதுகில் அமரும் சேணமாகவும், கொண்ட வேதங்களின் உருவமாகக் குதிரைவிளங்கிட அதில் வேதநாயகன் சாஸ்திரசாட்டையுடன் (வில்அம்புடன்) வலம்வருகிறார் அச்வாரூடராக இறைவனைத் தரிசிப்பது ஆன்மப்பயனை அளிக்கவல்லது என்றறிவோம்.

பறிஏறிய பரமன்துதி (அச்வாருடர்துதி)

நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும்
விரதம் கொண்டாட வல்லானும் விச்சின்றி நாறு செய்வானும்
முரச திர்ந்து ஆணைமுன் ஓட முன் பணிந்து அன்பர்க ளேத்த
வரவரைச் சாத்தி நின்றானும் ஆரூர் அமர்ந்த அம்மானே

திருநாவுக்கரசர் தேவாரம்



சூரவாகனம் [அசுரவாகனம்]

சூர வாகனப் பெருமை

